

கொலம்பியா
நாம் இருவர்
டிராமா ஸெட்
6 ரிகார்டுகள் · GE·6411 TO 6416
AVM புரொடக்ஷன்ஸ் நாம் இருவர்
படத்திலுள்ள ஒரிஜினல் பாட்டுகள்,
வசனங்களுடன் பிரபலநடிகர்களான
T.R. மஹாலிங்கம், B.R. பந்துலு
K. சாரங்கபாணி · T.R. ராமச்சந்திரன்
மற்றும் இதரர்களைக் கொண்டு
.......தயாரிக்கப்பெற்றது.......
ஸரஸ்வதீ ஸ்டோர்ஸ், மதராஸ். 2.

## அழகை அழகு பெற செய்வது அழகான ஆடைகளே!

பண்டிகைகள், கலியாண வைபவங்கள் இவைகளை சோபிக்க செய்யும், உயர்ந்த ரக, பட்டு, பனாரஸ், புடவை தினுசுகளும், மில், கைத்தறி ஜவுளிகளும், பல ரகங்களில் எம்மிடம் ஏராளமாக உள்ளன. இன்றே விஜயம் செய்யுங்கள்.

# ஹமீதியா ஸ்டோர்ஸ்

நாகரீக ஜவுளி வியாபாரிகள்

**22, கிழசித்திரைவீதி, - மதுரை**

---

# புயலுக்குப்பின்?

(ஒரு கற்பனைச் சித்திரம்)

கதை, வசனம், பாடல்: "கர்மயோகி"

நாடகப்புரவலர், நாடகக்கலாமணி, வைரம் அருணாசலம் செட்டியாரவர்களின் பூரண உரிமை பெற்ற நாடகம்.

## ஸ்ரீராம பால கான விநோத சபையார்

சென்னை மவுண்ட் ரோட்

## S. V. S. நியூ தியேட்டரில்

**11-11-47 முதல் தினசரி நாடகம் நடைபெறுகிறது**

தினசரி மாலை 6-15க்கும், வியாழன் மட்டும் இரவு 9-15க்கும்.

திங்கள் தோறும் விடுமுறை

டிக்கெட்டு விபரம்: 3-8-0, 2-12-0, 1-10-0, 1-3-0, 0-10-0.

விவரங்களுக்கு:

**டி. கே. எஸ். சகோதரர்கள்:**
திருச்சி, தஞ்சை, மலபார், இலங்கை, பர்மா
**ராமநாதன் பிக்சர்ஸ், (காரைக்குடி)**
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி.

**சேலம் ஷண்முகா பில்ம்ஸ்:**
கோவை, சேலம், தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை நகரம், ஆந்திரா, மைசூர், எப்.எம்.எஸ்.

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம்

கோவை ஷண்முகா தியேட்டரில்

9—12—47 முதல் தினசரி

# முள்ளில் ரோஜா

(ப. நீலகண்டன்)

134107

அவள் ஒரு தாசி! கற்பின் உருவாய் வந்த கணிகை!! ஒழுக்கத்தோடு வாழ விரும்பினாள்; உலகம் சிரித்தது; முடிவு என்ன?...

புதன், ஞாயிறு மாலை 6-30 — மற்ற நாட்கள் இரவு 9-30

திங்கள் விடுமுறை நாள்

வரியுட்பட கட்டணம்: **4-0-0, 2-12-0, 1-10-0, 0-13-0, 0-6-6**

வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பி 1, 2, 3-வது வகுப்புகள் ரிசர்வ் செய்து கொள்ளலாம்.

# HAIRODINE

வசீகர வதனம்
வனப்பு
மிக்க கூந்தல்

## ஹேரோடின்

ஜீவ சக்தி
வாய்ந்த கூந்தல்
தைலம்

**CARNATIC CHEMICAL WORKS MADRAS**

பிராஞ்சு: பெஷ்ராம்ஜி மேன்ஷன்ஸ் (முதல்மாடி), ஸர்.பி.எம். ரோடு, பம்பாய்
சென்னை ஏஜண்டுகள்: கோல்டுவின் & கோ, 50 பந்தர் தெரு, சென்னை
மதுரை ஏஜண்டு: ஜெனரல் கமர்ஷியல் ஏஜன்ஸி, கான்பாளையம் தெரு, மதுரை
பங்களூர் ஏஜண்டுகள்: கே. ஸ்ரீனிவாச ராவ், 57 இப்ராஹிம் சாகிப் தெரு, பங்களூர் (கண்டு).

அறிவும் அதிர்ஷ்டமும் ஒன்று சேரும்போது
புகழும், பணமும் தானாக வந்தடையும்

## உங்கள் அறிவையும் அதிஷ்டத்தையும்
## பரிக்ஷித்திர்கவா ?

இல்லையேல்—

நாங்கள் அளிக்கும் சந்தர்ப்பத்தை இன்றே
பயன்படுத்திக் கொள்ளுங்கள்

எந்த தேசத்தினராயினும், எந்த மாகாணத்தவராயினும், எந்த மதத்தினராயினும், எந்த பாஷையினராயினும், படித்தவர்களாயினும், படிக்காதவர்களாயினும், வாலிபர்களாயினும், வயோதிகராயினும், ஏழையாயினும், பணக்காரராயினும், வித்தியாசமின்றி

இந்த அறிவு-அதிர்ஷ்டப் பரீக்ஷையில் கலந்து கொள்ளலாம்.

விவரங்களுக்கு ஒரு கார்டு எழுதிப்போடுங்கள்.

## லக் & கோ

தியாகராய நகர் :: சென்னை. 17.



# கமர்ஷியல் பிராஸஸ்

சிறந்த பிளாக் தயாரிப்பவர்கள்

லைன், ஆப்-டோன், லைன் & ஆப்-டோன், இரண்டு கலர், மூன்று கலர் முதலிய பிளாக்குகளை சுத்தமாகவும் குறித்த காலத்திலும் செய்து தருகிறோம்.

ஒரு முறை விஜயம் செய்பவர்கள் எங்களுடைய நிரந்தர வாடிக்கைக் காரர்களாகி விடுவார்கள்.

விவரங்களுக்கு :

**கமர்ஷியல் பிரிண்டிங் & பப்ளிஷிங் ஹவுஸ்,**

46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை..

Telephone : **4037** Post Box No : **1569**

Telegrams : "PRINT HOUSE"

# "குண்டூசி"

மாத சினிமாப் பத்திரிகை

## சந்தா விவரங்கள்

**உள் நாடு :**

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 6 |
| ஆறு மாத சந்தா | ரூ. | 3 |
| தனிப் பிரதி | அணா | 8 |

**இலங்கை :**

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 6 |
| தனிப் பிரதி | சதம் | 50 |

**வெளி நாடு :**

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 9 |
| தனிப் பிரதி | அணா | 12 |

## விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

| | | |
|---|---|---|
| முன் பக்க அட்டை | ரூ. | 450 |
| கடைசிப் பக்க அட்டை | ரூ. | 250 |
| 2 & 3-ம் பக்க அட்டை | ரூ. | 150 |
| சாதாரண ஒரு பக்கம் | ரூ. | 75 |
| சாதாரண அரைப் பக்கம் | ரூ. | 40 |
| சாதாரண $\frac{1}{3}$ பக்கம் | ரூ. | 30 |

### கட்டுரையாளர்களுக்கு

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், உங்கள் ஊர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்பந்தமான விகடத் துணுக்குகள், கட்டுரை, கதைகள், "குண்டூசி"யைப்பற்றிய உங்கள் அபிப்பிராயங்கள் இவையெல்லாம் வரவேற்கப் படுகின்றன. எழுதி அனுப்புபவைகளைக் காகிதத்தின் ஒரே பக்கத்தில், மையினால் சுத்தமாக எழுதி அனுப்ப வேண்டும்.

காரியாலயம் :

**246, தம்பு செட்டி தெரு,**

**சென்னை 1.**

# இந்த ஊசியில்

—*—


| | |
|---|---|
| புதிய தமாஷா வரி ... ... | 9 |
| தமாஷா வரி விகிதங்கள் ... | 10 |
| உள்ளது உள்ளபடி — "ஜடாயு" ... | 11 |
| தேர்தல் நாடகம் —கே. மஹாதேவன் ... | 13 |
| ஆள் விழுங்கி - பணம் விழுங்கி —சித்திரம் ... | 15 |
| ரஜனி—மூவர்ணப் படம் ... | 17 |
| பி. எஸ். ஸ்ரீநிவாஸ ராவ் "குண்டூசி" ... | 19 |
| குண்டூசியைக் கேளுங்கள்... | 23 |
| செய்திப் படங்கள் ... | 31 |
| நுனிப் புல்—"வெட்டுக்கிளி" | 39 |
| பொதுஜனம் பேசுகிறார் ... | 42 |
| நவாப் ராஜமாணிக்கம் —பிரசங்கம் ... | 46 |
| இது செய்தி ... | 47 |
| எம். எஸ். சுந்தரி பாய் —மூவர்ணப் படம் ... | 52 |
| பிரம்மலோகம் ... ... | 53 |
| ஏமாந்தது யார்? —சித்திரம் ... | 57 |
| கிச்சு - பிச்சு —ச. து. சு. யோகி ... | 61 |
| குண்டூசி டைரி ... ... | 68 |


**அட்டைப்படம் :**

வெகு விரைவில் பிரபலம் அடைந்து வரும் மேனகா முதன் முதலாக கதா நாயகி வேஷத்தில் ("கங்கணம்" படத்தில்) இவ்விதம் தோன்றுகிறார்.

## எங்கள் வியாபார ஸ்தலங்கள்

பெங்களூர், பனரிஸ், காஞ்சிவரம்,
பெங்கால் பட்டுப்புடவைகளுக்கும் இன்னும்
எல்லாவித ஜவுளி தினுசுகளுக்கும் பெயர்
போனவை

காலநிலையை அனுசரித்தே விலை

# P.R. நாராயணசாமி அய்யர்

Branch:

**Fancy Hall,** பட்டு, நூல் ஜவுளி வியாபாரம்

சைனபஸார்,
திருச்சினப்பள்ளி

பெரியகடைவீதி,
திருச்சினப்பள்ளி

# ஸ்டேஜ் & ஸ்க்ரீன்

(மாதம் இரு முறை சினிமா பத்திரிகை)

அழகிய படங்கள், அறிஞரின் கட்டுரைகள்,
பட்டம்மாள் பதிலளிக்கிறார் மற்றும் பல
புதிய அம்சங்களுடன்,

பிரதி மாதம் 10, 25 தேதிகளில் வெளிவருகிறது.

தனிப் பிரதி அணு நான்கு
வருஷ சந்தா ரூ. 6.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 5 அணு ஸ்டாம்பு அனுப்புக.

---

## ஸ்டேஜ் & ஸ்க்ரீன்

45-46, அரண்மனைக்காரத் தெரு, - சென்னை 1.

பட்டை 1
ஊசி 6

# குண்டூசி

டிஸம்பர் 1947

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

## புதிய தமாஷா வரி

சென்ற சில மாதங்களாக சினிமா, நாடக, சங்கீத வட்டாரங்களில் ஏற்பட்டிருந்த கூக்குரலுக்கு ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது. சென்னை சட்ட சபையில் தமாஷா வரி திருத்த மசோதா அங்கீகரிக்கப் பட்டு, சட்டமாகி விட்டது.

சர்க்கார் முதலில் கொண்டு வந்த மசோதாப்படி, எல்லா வகுப்புக் கட்டணங்கள் மீதும் $33\frac{1}{3}$% வரி விதிப்பதென்று தீர்மானித்தனர். இந்த மசோதாவை நிறைவேற்றியிருந்தால், பிறகு, இம் மூன்று தொழிலிலுள்ளவர்களும் வேறு தொழிலை நாடிச் செல்ல வேண்டியதாகியிருக்கும். ஆனால், சர்க்கார் தாராள மனதுடன் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி, பரிசீலனை செய்து, கூடிய வரையில் வரி விகிதங்களைக் குறைத்திருப்பதற்காகப் பாராட்டுகிறோம்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், நாடகம், சங்கீதக் கச்சேரி, கலைக் காட்சிகள் இவைகளுக் கெல்லாம் பிரத்தியேக சலுகை காட்டியிருப்பதாகும். நாடகக் கம்பெனிகளின் தற்கால நிலைமையை உத்தேசிக்கும் போது சர்க்கார் காட்டியுள்ள இந்த சலுகை அத்யாவசியமானதுதான். நாடகங்களுக்கு 3 ரூபாய்க்கு உட்பட்ட கட்டணங்கள் மீது $12\frac{1}{2}$% வரியும், 3 ரூபாய்க்கு மேல் 5 ரூபாய்க்கு உட்பட்ட கட்டணங்களுக்கு 20% வரியும், 5 ரூபாய்க்கு மேற்பட்ட கட்டணங்கள் மீது $33\frac{1}{3}$% வரியும் விதிப்பதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சினிமாப் படங்களுக்கு, 5 அணா வரையிலுள்ள கட்டணங்கள் மீது 20% வரியும், 5 அணா முதல் $1\frac{1}{2}$ ரூபாய் வரை உள்ள கட்டணங்கள் மீது 25% வரியும், $1\frac{1}{2}$ ரூபாய்க்கு மேற்பட்ட கட்டணங்கள் மீது $33\frac{1}{3}$% வரியும், இனி வசூலிக்கப்படும்.

சர்க்கார் முதலில் கொண்டு வந்த மசோதாப்படி, இப்போதிருக்கும் (வரியுடன் கூடிய) கட்டணங்கள் மீது $33\frac{1}{3}$% வரி விதிக்க நினைத்தனர். இப்படிச் செய்வது வரிமீது வரி விதிப்பதாகும் என்பதைச் சர்க்கார் ஒப்புக் கொண்டு, டிக்கெட்டுகளின் (வரிநீக்கி) நிகர வருமானத்தின் மீதே புதிய வரியை விதிப்பதென்று தீர்மானித்திருப்பது அவர்களுடைய நியாய மனப்பான்மையைக் காட்டுகிறது.

பொதுவாக, வரி மேலும் உயர்த்தப்படுவதை சினிமாத் தொழில் விரும்பவில்லை என்றாலும், முதலில் சர்க்கார் விதிக்க நினைத்த அநீதியான வரியைக் கைவிட்டதற்காக பெருமூச்சு விடுகிறது. நாடகத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கோ இந்த மசோதா சாதகம் செய்வதால் அவர்கள் சந்தோஷப்படுவர் என்பது நிச்சயம்.

# புதிய தமாஷா வரி விகிதங்கள்

தமாஷா வரி திருத்த மசோதா சென்னை சட்டசபையில் நவம்பர் மாஸம் 29ந் தேதியன்று சட்டமாக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள வரி, சர்க்கார் விதிக்க நினைத்த வரி, கடைசியில் விதிக்கப்போகும் வரி முதலிய விவரங்களை கீழேயுள்ள அட்டவணை மூலம் நேயர்கள் தெரிந்துகொள்ளலாம்.

| வரி உட்பட இப்போதிருக்கும் கட்டணம் | இதில் வரி போக டிக்கெட்டின் நிகர வருமானம் | முதல் மசோதாவின்படி ஏற்படக் கூடிய கட்டணம் | செலக்ட் கமிட்டி சிபார்சுப்படி ஏற்படக்கூடிய கட்டணம் | நிறைவேறிய மசோதாப்படி ஏற்படும் கட்டணம் | முதல் மசோதாப்படி எதிர்பார்த்த அதிக வரி | நிறைவேறியுள்ள மசோதாப்படி கிடைப்பது |
|---|---|---|---|---|---|---|
| 2 6 0 | 2 0 0 | 3 0 0 | 3 0 0 | 2 11 0 | 10 அணு | 5 அணு |
| 1 14 0 | 1 8 0 | 2 4 0 | 2 4 0 | 1 14 0 | 6 ,, | 0 ,, |
| 1 9 0 | 1 6 0 | 2 1 0 | 2 1 0 | 1 12 0 | 8 ,, | 3 ,, |
| 1 3 0 | 1 0 0 | 1 8 0 | 1 5 0 | 1 4 0 | 5 ,, | 1 ,, |
| 0 12 6 | 0 11 0 | 1 0 6 | 0 14 9 | 0 13 9 | 4 ,, | $1\frac{1}{4}$ ,, |
| 0 9 6 | 0 8 0 | 0 12 0 | 0 10 9 | 0 10 9 | $2\frac{1}{2}$ ,, | $\frac{1}{2}$ ,, |
| 0 6 9 | 0 6 0 | 0 9 0 | 0 8 0 | 0 7 6 | $2\frac{1}{4}$ ,, | $\frac{3}{4}$ ,, |
| 0 4 9 | 0 4 0 | 0 6 0 | 0 5 0 | 0 4 9 | $1\frac{1}{4}$ ,, | 0 ,, |

# உள்ளது உள்ளபடி

## ஜடாயு

சென்னை தணிக்கை போர்டின் புதிய அங்கத்தினர்கள் ஜாபிதா இந்த ஊசியில் வேருெரு பக்கத்தில் வெளியாகியிருக்கிறது. அதில் சென்ற வருஷம் அங்கம் வகித்தவர்களில் சிலரது பெயர்கள் இவ் வருஷமும் காணப்படுகிறது. சென்ற வருஷம் ஓரளவு தேசிய மனப்பான்மையோடு இந்த போர்டு மாற்றி அமைக்கப் பட்டது. ஆனல் பல வருஷ மாமூல் மெம்பர்களும் அதில் இடம் பெற்றிருந்தனர். இந்த வருஷமும் இந்த "மாமூல்" மாறிவிட வில்லை.

சென்ற வருஷம் மாமூல் சிறிது மாறியதால் தேசிய மனப்பான்மை உடைய சிலருக்கு அதில் இடம் கிடைத்தது. அதன் விளைவாக அவர்கள் அந்தக் குறுகிய காலத்திற்குள்ளாகவே தணிக்கை விதிகளில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தி, தலை குப்புறப் போய்க்கொண்டிருந்த சினிமாத் தொழிலை (காமக் கோரங்களிலிருந்து) ஓரளவு காப்பாற்றி யிருக்கிருர்கள். தொழிலைச் சரியான நிலைக்குக் கொண்டு வருவதற்கு தணிக்கை போர்டார் எவ்வளவோ மாறுதல்களைச் செய்யவேண்டி யிருக்கிறது. ஆகவே சென்ற வருஷத்தில் மிக அக்கரையுடன் உழைத்த ஸ்ரீ. வி. ஸி. கோபாலரத்னம், ஸ்ரீ. சம்பந்த முதலியார் போன்ற அங்கத்தினர்களுக்கு மீண்டும் இடம் அளித்திருப்பது பாராட்டத் தக்கதாகும். இவர்கள் சென்ற வருஷம் எடுத்துக்கொண்ட சீர்திருத்த வேலையை இவ்வருஷமும் தொடர்ந்து நடத்துவதற்கு இது செளகரியமாயிருக்கும்.

### என்ன செய்ய வேண்டும்?

தணிக்கை விதிகளை மாற்றி அமைத்ததை சில சுயநலமிகள் ஆட்சேபித்த போதிலும் பொது நல நோக்கமுடையவர்களும், பத்திரிகைகளும் தணிக்கை போர்டாரின் செய்கையைப்பூரணமாய் ஆதரித்தனர். ஆனல் சில படங்களில் பழைய மாதிரியிலேயே காமக் காட்சிகள் அநுமதிக்கப் பட்டிருந்ததைப் பார்த்த எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. தணிக்கை விதிகளைக் கையாள்வதில் அங்கத்தினருக்கு அங்கத்தினர் மாறுதலாய் நடந்து கொள்ளக் கூடாது. இன்னென்று: இந்தியப் படங்களில் ஒரு குறிப்பிட்ட காட்சியை வெட்டி விட்டு அதே போன்ற காட்சியை மேனுட்டுப் படங்களில் காட்ட அநுமதிப்பதும் சரியான கொள்கையாகாது. இந்த வருஷத்தில் இது போன்ற மேடு பள்ளங்களெல்லாம் நிரவப் பட்டுவிடும் என்று நம்புகிறேன்.

### சிறுவர்களைக் காப்பாற்றுக

தணிக்கை போர்டார் முக்கியமாகச் செய்யவேண்டிய இன்னெரு சீர்திருத்தமும் இருக்கிறது. தற்காலச் சிறுவர் சிறுமிகள்தாம் பிற்காலத்துப் பிரஜைகளாகின்றனர். இவர்கள் வாழ்க்கை, லக்ஷியம், அறிவு முதலியவை யெல்லாம் தற்போதைய நிலைமையைவிட மேம்பட்டதாக இருக்கவேண்டும் என்பதே எல்லோரது விருப்பம் ஆகும். அப்படியிருக்க இவர்கள், காதலைப் பற்றியோ, காமத்தைப்பற்றியோ, நினைக்கவே கூடாத வயதில், அவைகளை படங்களில் பார்ப்பதால் பகிரங்கமாய் கற்றுக்கொள்ளுகிருர்கள். அதன் விளைவாக ஆயிரக் கணக்கான சிறுவர் சிறுமிகளும் வெதும்பிய பிஞ்சுகள் ஆகிவருகின்றனர். பிற்காலத்தில் திடகாத்திரமும், மனேகாத்திரமும், ஒழுக்க சீலர்களுமான பிரஜைகளை நம் சர்க்கார் அடைய வேண்டுமானல் இத்தகைய போக்கிற்கு உடனே ஒரு புள்ளி போடவேண்டும்.

### தனிப் படம் வேண்டும்

"14-வயதிற் குட்பட்டவர்கள் பார்க்கக் கூடாத படம்" என்று பல படங்களுக்கு மேனுட்டில் முத்திரையிட்டு விடுகிருர்கள். இவைகளை சிறுவர் சிறுமியர் பார்க்க அநுமதிக்கப் படுவதில்லை. இதே போல் நம் நாட்டிலும் கட்டுப்பாடு விதிக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இப்படிச் செய்வதால் சினிமா சிறுவயதினருக்குப்

பொழுது போக்களிப்பது கூடாது என்பது அர்த்தமல்ல. மேனாட்டில் ஒன்று எல்லா வயதினரும் பார்க்கக்கூடிய படங்களைத் தயாரிக்கின்றனர்; அல்லது சிறு பிராயத்தினர் பார்ப்பதற்கென்றே தனியாகப் படங்களைத் தயாரிக்கின்றனர். தணிக்கை போர்டார் இது சம்பந்தமாக உடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். இவ்விதக் கட்டுப்பாடு ஏற்படின் பட முதலாளிகள் தங்கள் படங்களை எல்லோரும் பார்க்கக்கூடியபடி தயாரிக்க முற்படுவார்கள்.

சிறுவர்க்கென்றே தனிப் படங்களைத் தயாரிக்கவும் முற்படுவார்கள்.

நாடக மானேஜர் :—(நடிகரிடம்) இந்தப் பக்கத்தில் ஒரு தோட்டம் இருப்பதாகப் பாவித்துக் கொள்ள வேண்டும். அதோ வலது புறம் ஒரு மலை இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டும் பின் புறத்தில் ஒரு சமுத்திரம் இருக்கிறதாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டும்.

நடிகன் :—இரண்டு நாள் இப்படியே நாடகம் நடந்தால், பிறகு முன்புறம் ஜனங்கள் இருப்பதாகவும் கற்பனை செய்து கொள்ள வேண்டியிருக்கும்.

## சட்டசபையில் சினிமா

சென்ற ஒரு வருஷ காலத்துல நம் தென்னிந்தியப் படங்கள் மிகத் தூய்மை அடைந்துள்ளன. ஆனால் சட்டசபையில் அங்கம் வகிக்கும் அநேக பொதுஜனப் பிரதிநிதிகளுக்கு சினிமாத் தொழில் பற்றி உண்மையில் ஒன்றுமே தெரியாது என்பது, சமீபத்தில் நடைபெற்ற தமாஷா வரி விவாதத்தின் மூலம் வெளியாகிறது. இந்த அங்கத்தினர்கள், வெளிப்படையாகத் தெரிவதையும் பேசப்படுவதையும் வைத்துக்கொண்டே இத்தொழிலைப் பற்றிய தம் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதுதான் உண்மை. பொக்கிஷ மந்திரியே, "சினிமாமுன் கூடும் ஏராளமான கூட்டத்தைக் கொண்டே சினிமா சுபீட்சமாக நடந்து வருவதாக நான் நினைத்து விட்டேன்" என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். இன்னொரு அங்கத்தினர், "சினிமாவுக்கு ஏராள வரியைப் போட்டு அதை அதிகம் ஓடாமல் செய்வதால் மக்களுக்கு நன்மை ஏற்படும்" என்று கூறியிருக்கிறார். "தற்போது சினிமாத் தொழில் நடந்துவரும் ரீதியில் அதற்கு சர்க்கார் ஆதரவே காட்டக் கூடாது" என்று பாகனேரி ஆர். வி. ஸ்வாமிநாதன் கூறி சினிமாத் தொழிலைத் தாக்கிப் பேசினாராம்,

## ஆச்சரியமில்லை!

இதெல்லாம் எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணவில்லை. ஏனென்றால், சட்டசபை அங்கத்தினர்களில் அநேகருக்குத் தான சினிமாவைப் பற்றி ஒன்றுமே தெரியாதென்று சொன்னேனே. ஆனால் இவர்களிடையே சிலருக்கு மட்டும் சினிமாத் தொழிலைப் பற்றித் தெரிந்திருப்பதும், "சினிமா ஒரு தேசியத் தொழில்; அதற்கு ஆதரவு காட்ட வேண்டும்" என்ற கொள்கையை அங்கத்தினர்களில் பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டிருப்பதையும் அறிய கொஞ்சம் ஆறுதல் ஏற்படுகிறது.

## 'மாலினி'க்குப் பாராட்டு

ஸ்ரீ. ஸ்வாமிநாதன் சினிமாத் தொழிலைத் தாக்கிப் பேசியதற்காக அவரைத் தாக்கி ஸ்ரீ. டி. எஸ். பட்டாபிராமன் பேசினார். முந்தினவர் மட்டமான படங்களைப் பார்த்துவிட்டே இவ்வித தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டுமென்றும், அவர் "மிஸ் மாலினி"யைப் பார்த்திருந்தாரானால் இப்படிக் கூறியிருக்கவே மாட்டாரென்றும் கூறினார்.



# தேர்தல் நாடகம்

இடம் :—கோவிந்தா பில்ம்ஸ். டைரெக்டரின் அறை.

நேரம் :—காலே பத்து மணி.

பில்ம் டைரெக்டர் — V. நாயகம் மெல்லிய குரலில், "எப்போ வருவாரோ" என்று பாடிக்கொண்டிருக்கிறார். நாயகம் ஒரு சிறந்த டைரெக்டர். அத்துடன்கூட பெரிய சங்கீத ரஸிகர். சங்கீதம் என்றால், அதுவும் கர்நாடக சங்கீதம் என்றால் சாப்பாடு கூட வேண்டாம் அவருக்கு. 'தமிழ்ப் படம் முன்னேற வேண்டுமானால், ஒவ்வொரு படத்திலும் இனிமையான கர்நாடக சங்கீதம் நிறைந்திருக்க வேண்டும்' என்பது அவருடைய கொள்கை. இந்தக் கொள்கையை தாம் எடுக்கத் தீர்மானித்திருந்த காமாக்ஷியின் காதல் என்ற படத்தின் மூலம் ஸ்தாபிக்க வேண்டுமென்று அவர் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார். பில்ம் கம்பெனியின் வெளித் திண்ணையில் "நடிக, நடிகைகள் தேவை—நேரில் பேட்டி காணவும்" என்று எழுதப்பட்டிருந்த போர்டு தொங்குகிறது. அதனருகில் நாலைந்து பேர்கள் காத்திருக்கிறார்கள்.

நாயகம் :—பியூன்!...டேய் கந்தசாமி!...

(மணி அடிக்கிறார்.)

பியூன் :—கூப்பிட்டீங்களா, ஸார்?

நாயகம்:—ஆமாம்; வெளியிலே எத்தனை பேர் காத்திருக்கிறார்கள்?

பியூன் :—ஆறு ஆம்புள்ளேங்களும் ஒரு பொம்புள்ளேயும், ஸார்.

நாயகம் :—சரி; நீ போய் முதலில் அந்த அம்மாளை அனுப்பு.

(பியூன் வெளியே போகிறான், சிறிது நேரத்தில் ஒரு பெண் மணி உள்ளே வருகிறாள்.)

நாயகம் :—இப்படி உட்காருங்கள் உங்களுடைய பெயரென்ன?

பெண்மணி —கல்யாணி.

நாயகம் :—நிஜப் பெயர்?

பெண்மணி :—க...க...கருப்பாயி...

நாயகம் :—ஏன் தயங்குகிறீர்கள். தைரியமாய் பதில் சொல்லுங்கள். உங்கள் பெயர் ரொம்ப அழகாய் அமைந்திருக்கு. "கல்யாணி" ஆஹா, அழகான ஒரு ராகத்தின்

நாகர்கோயில்

**கே. மஹாதேவன்**

பெயர்...ம்...இதற்கு முன் படங்களில் நடித்திருக்கிறீர்களா?

**கல்யாணி :—** இல்லே.

**நாயகம் :—** உங்களுக்கு பாடத் தெரியுமா?

**கல்யாணி :—**(வியப்புடன்) என்ன, பாடவா?

**நாயகம் :—** ஆமாம். பாட்டென்றால் சாதாரணப் பாட்டல்ல. ஜோரான தமிழ்ப் பாட்டு. ஏன் விழிக்கிறீர்கள். தெரியுமா? தெரியாதா? சொல்லுங்கள்......

**கல்யாணி ;—** வந்து....பாட்டுக்கும்.... எனக்கும்...

**நாயகம் :—** ஸ்நான ப்ராப்தி கூட கிடையாதென்று சொல்லுகிறீர்களா? நாசமாய்ப் போச்சு! பாடத் தெரியா விட்டால் படத்தில் எப்படி நடிக்க முடியும்?

**கல்யாணி :—** ஹி... ஹி....தெரியாமலென்ன—ஆனல் தமிழ்ப் பாட்டு மட்டும் ரொம்ப நாளைக்கு முன்னலே படிச்சதுதான் ஞாபகமிருக்கு. அதை எப்படி.........

**நாயகம் ;—** அதனலென்ன, பரவாயில்லே, அதையே பாடுங்கள்.

*(கல்யாணி வெட்கத்துடன் தொண்டையைக்கனைத்துக் கொண்டு பாடுகிருள்)*

''ஐயா ஒரு சேதி கேளும்—உங்கள்
அடுத்த வீட்டுக்காரப் பெண்களெல்
[லாம்
பொல்லாத வாண்டுகளாம்—பெரிய '')

**நாயகம் :—** அம்மா, அம்மா! பாட்டை நிறுத்துங்கள்! இந்த மாதிரி நீங்கள் பாடுவதைக் கேட்டால், அந்த கோபாலகிருஷ்ண பாரதியின் ஆத்மா எவ்வளவு துடிக்கும்? நந்தன் சரித்திரப் பாடலே இப்படியா கொலே செய்வது? கர்மம், கர்மம்!

உங்களுக்கு பாடவே தெரியாது போலிருக்கே?

**கல்யாணி :—** அதைத்தான் முதலிலேயே சொன்னேனே.

**நாயகம் :—** ரொம்ப சரி. நீங்கள் போகலாம். பாடத் தெரியாதவர்களுக்கு இங்கே வேலே கிடையாது. பியூன்! அடுத்த ஆளே அனுப்பு.

*(கல்யாணி வெளியே செல்கிருள். அவளுக்கும் நாயகத்துக்கும் நடந்த சம்பாஷணைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இரண்டாவது பேர்வழி, முன் ஜாக்கிரதையாக ''பொழுது விடிந்தது'' என்ற பூபாள ராகப் பாட்டைப் பாடிக் கொண்டே உள்ளே வருகிருர்.)*

**நாயகம் :—** யாரையா நீர்? பூலோக நாரதர் போலிருக்கு. வரும்போதே சங்கீதத்தோடு வருகிறீரே?

**வந்தவர்:—** ஹி...ஹி... சங்கிதந்தான் என் ஜீவ நாடி என்பது உலகப் பிரசித்தமாச்சே. ராதாகிருஷ்ண பாகவதர் என்று நீங்கள் கேள்விப் பட்டதில்லேயோ.

**நாயகம் :—** பேஷாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதிருக்கட்டும்; நீர் உள்ளே வரும்போது பாடிக் கொண்டே வந்தீரே ஒரு பாட்டு—அதை இன்னெரு முறை பாடும்.

*(வந்தவர் பாடுகிருர்)*

''பொழுது விடிந்தது, யாம் செய்த தவத்தால்—பொங்கலும் பூரியும்.''

**நாயகம் :—**(எரிச்சலோடு) அபத்தம்! அபஸ்வரம்! இது பாட்டா? அல்லது பிலாக்கணமா, ஐயா? அருமையான பூபாளப் பாட்டை இப்படிக் கொலே செய்கிறீரே? இது நியாயமா? உமக்குக் கொஞ்சமாவது சங்கித ஞானம் இருக்கா?

**வந்தவர் :—** நிறைய இருக்கு. சினிமாவுக்கு, இது போதாதா?

**நாயகம் :—**(கோபத்துடன்) துளிக்

↑ ஆள்விழுங்கி - பணம்விழுங்கி ↓
தில்தில்சுந்தரி
ரிடேக் 10
-மணியன்-

கூடப் போதாது. உம்முடைய பாட்டைக் கொண்டு படம் எடுத்தால்—அதை நீரும் நானும்தான் பார்க்கணும். படம் ஓடுவதற்குப் பதிலாக படத்தை எடுத்துக் கொண்டு, நீரும் நானும்தான் ஊர் ஊராக ஓடணும். பேசாமல் நடையைக் கட்டும்.

(வந்தவர் போகிருர்.)

நாயகம் :—முட்டாள்...விவரமில்லாமல் உளறுகிருன். இந்த மாதிரி ஞான சூனியங்களை வைத்துக் கொண்டு யாரால் மாரடிக்க முடியும்?

(மூன்றும் பேர்வழி ஒருவர் உள்ளே வருகிருர்.)

நாயகம் :—நீங்கள் யார் ?

வந்தவர் :—நாளு...பிரபல சங்கீத வித்வான் கஜகர்ணம் இருந்தாரல்லவா........

நாயகம் : — ஆமாம் அவருக்கென்ன ?

வந்தவர் :—அவர் காலமாகி விட்டார். அவருடைய சித்தப்பாவின் மாமியாருடைய பெரியப்பாபிள்ளைதான் நான்.

நாயகம் :—அடடா ! நீர் பெரிய சங்கீத பரம்பரையில் வந்தவராயிருக்கிறீரே. அப்படியானல் நீரும் ஒரு பெரிய சங்கீத வித்வான் என்று சொல்லும் !

வந்தவர் :—பெரிய வித்வான் இல்லை; சின்ன வித்வான்தான்.

நாயகம் :—அது சரி, ரொம்ப நாழிகையாகி விட்டது. உம்மையும் அதிக நேரம் நிறுத்த எனக்கு இஷ்டமில்லை......உமக்குத் தமிழ்ப் பாட்டுத் தெரியுமா ?

வந்தவர் :—ஓ, பேஷாய்த் தெரியும். பாடட்டுமா ?

நாயகம் : — (சந்தோஷத்துடன்) புலிக்குப் பிறந்தது பூனையாய்ப் போகுமா. சங்கீத வம்சம் என்பது உம்ம பேச்சிலிருந்தே தெரிகிறதே. எங்கே...பாடும்...கேட்கிறேன்.

(வந்தவர் பாடுகிருர்.)

"பாராமுகம் ஏனடா அடிமையிடம் பாராமுகம் ஏனரா"......

நாயகம் :—ஓய்...ஓய் ! — கொஞ்சம் நிறுத்தும் ஐயா ! வார்த்தைகளை ஏன் இப்படி விழுங்குகிறீர் ?

"பாராமுகம் ஏனடா" வா?

"பாராமுகம் ஏனரா" வா ?

அல்லது "பாராமுகம் ஏனய்யா' வா? [எது சரி?

வந்தவர் ;—(திகைப்புடன்)

"பாராமுகம் ஏனராடா"...இல்லை ...இல்லை

"பாராமுகம் ஏனய்யரா" அடிமை [யிடம்

நாயகம் :—ஓய், மஹா வித்வானே ! உமக்குத் தமிழும் தெரியாது, தெலுங்கும் தெரியாது, ஒண்ணுமே தெரியாது. பேசாமல் நடையைக் கட்டும்.

(வந்தவர் போகிருர்.)

நாயகம் :—(எரிச்சலோடு) பியூன் ! பியூன் ! பியூ...ன்!

பியூன் :—என்ன சார்......

நாயகம் :—"நடிகர் தேவை" என்ற போர்ட்டைஎடுத்துஉள்ளே வைத்து விட்டு, "தேவை யில்லை" என்ற போர்டை உடனே மாட்டு...ம்... சீக்கிரம்....போ !...

["நாடகமே உலகம்—இந்த நாயகம் செய்வதை—யாரறிவார், ஒரு நாடகமே உலகம்" என்று மெதுவாகப் பாடிக் கொண்டே பியூன் வெளியே போகிருன்.]

திரை விழுகிறது !

# பி. எஸ். ஸ்ரீனிவாஸராவ்

## வாழ்க்கை வர்ணனை

"நாயைக் கண்டால் கல்லைக் காணோம்; கல்லைக் கண்டால் நாயைக் காணோம்" என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல், நம் நடிகர்களில் பெரும்பாலோருக்கு அழகு பூஜ்யம். கொஞ்சம் அழகிருந்தால் பேச்சு வராது; பேச்சும் அழகும் கூடியிருந்தால் நடிக்க வராது; இம் மூன்று அம்சங்களும் கூடியிருந்தால் பாட்டு மோசமாயிருக்கும்; இவை எல்லாமே ஓரளவு பொருந்தியிருந்தாலோ அவருக்குப் பலதரப்பட்ட பாத்திரங்களை ஏற்று நடிப்பதற்கான வித்தைகள் தெரிந்திருக்காது.

மேலே சொன்னது போன்ற "ஒன்றிருந்தால் இன்னொன்றிராத" கதாநாயகர்கள்தாம் தமிழ்ப் படவுலகில் மலிந்து கிடக்கின்றனர். இவர்களில் அநேகரும் தங்கள் சங்கீதம் ஒன்றின் மூலமே தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொண்டு வருகின்றனர். நக்ஷத்திரப் பதவியை அடைந்த பின்னர் கூட இவர்கள் தங்கள் பதவிக்கு அத்தியாவசியமான—தங்களுக்குத் தெரியாத—வித்தைகளைக் கற்றுக் கொள்வதில்லை. ஆதலால்தான் இவர்களை நாம் ஒரே மாதிரியான படங்களில்—ஒரே மாதிரியான பாத்திரங்களில் பார்த்துச் சலிக்க வேண்டியதாயிருக்கிறது.

இத்தகைய மோசமான சூழ்நிலையின் மத்தியில் பிரபல நடிகர் பி. எஸ். ஸ்ரீனிவாஸ ராவ் ஒரு மின்மினி போல் பிரகாசிக்கிறார் என்றால் மிகையாகாது. முக அழகும், அங்க அமைப்பும் கூடிய கதாநாயகன் வேண்டுமா? உணர்ச்சி மிகுந்த பாத்திரங்களிலோ, அல்லது 'ஸ்டன்ட்' படங்களிலோ நடிக்க வேண்டுமா? கர்னாடகம் ஹிந்துஸ்தானி ஆகிய இருவகை சங்கீதமும் பாட வேண்டுமா? ஹிந்தி, மராத்தி, தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், தமிழ் ஆகிய எந்த பாஷையிலாவது பேச வேண்டுமா? நடிப்பது மட்டுமல்ல படத்தை டைரெக்ட் செய்யவும் வேண்டுமா? இது போல படத் தொழிலில் ஏற்படும் பற்பல தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய திறமைகளை ஸ்ரீனிவாஸ ராவ் ஒருங்கே பெற்றிருக்கிறார்.

சாதாரணமாக, நம் நடிகர்கள் தமிழ்ப் படங்களில் நடிப்பதற்கே திறமை அற்றவர்களாய் உள்ளனர். இரண்டு பாஷைப் படங்களில் நடித்திருப்பவர்களோ அபூர்வம். அப்படியிருக்க ஸ்ரீனிவாஸ ராவ் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மராத்தி ஆகிய நான்கு பாஷைப் படங்களில் நடித்திருக்கிறார்; தமிழ் தெலுங்கு ஆகிய



"துளஸி" ஹிந்திப் படத்தில் ஒரு காக்ஷி. த்ரிலோக் கப்பூர், ஸ்ரீநிவாஸ், ராஜகுமாரி.

இரு பாஷைப் படங்களை டைரெக்ட் செய்திருக்கிறார் என்றால் அதைப் பெரிய அதிசயம் என்று சொல்லாமல் வேறென்னவென்று சொல்வது? இவ்வளவு இருந்தும் அவருடைய திறமைகளைத் தமிழ்ப் படவுலகம் சரிவரப் பயன் படுத்திக் கொள்ளாமலிருப்பதற்கு வருந்தாமல் வேறு என்ன செய்வது?

ஸ்ரீனிவாஸ ராவ் 1908-ம் வருஷம் டிஸம்பர் மாஸம் 21-ந் தேதியன்று வடாற்காடு ஜில்லாவிலுள்ள சித்தூரில், ஒரு கண்யமிக்க மஹாராஷ்டிர பிராம்மண குலத்தில் பிறந்தவர். இவர்களது பூர்வீகம் புதுக்கோட்டை என்றாலும் வடாற்காடு ஜில்லாவில் குடியேறி சில தலைமுறைகளாகி விட்டன. சென்னை செங்கல்வராயன் டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டில் 1908 முதல் 1937 வரை உதவி சூப்பரின்டெண்டாக உத்தியோகம் பார்த்து வந்த ஸ்ரீ. சகாராம் ராவ்தான் இவருடைய தகப்பனார். புதுக்கோட்டையில் முன்சீப்பாயிருந்த ஸ்ரீ. மல்லாரி ராவ் இவரது த்கப்பனாரைப் பெற்ற பாட்டனார் ஆவார். பரோடா, கொச்சி, திருவாங்கூர் ஆகிய சமஸ்தானங்களில் திவானாயிருந்த ஸ்ரீ. வி. பி. மாதவராவின் புதல்வர் இவருடைய அத்தையின் கணவராவார்.

ஸ்ரீனிவாஸராவின் குழந்தைப் பருவமெல்லாம் அவருடைய தாயாரைப் பெற்ற பாட்டனாருடன் தெலுங்கு ஜில்லாக்களில் கழிந்தன. ஆதலால் ஐந்தாவது வகுப்பு வரையில் அவர் தெலுங்கிலேயே பாடங்களைக் கற்க வேண்டியதாயிற்று. தம் பத்தாவது வயதில் அவர் சென்னைக்கு வந்து புரசவாக்கம் ஸி. ஆர். ஸி. ஹைஸ்கூலில் சேர்ந்த போதே சமஸ்கிருதத்தையும், தமிழையும் கற்க ஆரம்பித்தார். பின்னர் அவரது தாயார் தேக அசௌக்

இயமுற்றதால் திருப்பதிக்குச் செல்ல வேண்டியதாயிற்று. 1926-ம் வருஷத்தில் அவர் மீண்டும் சென்னைக்கே வந்து, பிரஸிடென்ஸி கல்லூரியில் படித்து 1931-ம் வருஷத்தில் பி. ஏ. பட்டத்தைப் பெற்றார்,

பிரஸிடென்ஸி கல்லூரியில் படித்து வந்த போதுதான் அவருடைய பிற்கால வாழ்க்கையின் வேர் முளைக்க ஆரம்பித்தது. சென்னை மஹாராஷ்டிர சங்கத்தில் ஸ்ரீனிவாஸ ராவுக்கு மிகுந்த அக்கரை ஏற்பட்டிருந்ததால் இந்த சங்கத்தினர் நடத்திய அமெச்சூர் நாடகங்களில் அவர் நடிக்க முற்பட்டார். அவர் சில சமயங்களில் பெண் வேஷங்களில் கூடத் தோன்றியிருக்கிறாராம்.

அவருக்கு பால்யம் முதலே சங்கீதத்தில் ஒரு லயிப்பு இருந்ததாம். அதன் விளைவாக அவர் தம் படிப்பு முடிந்ததும் சென்னை சர்வ கலாசாலையில் சேர்ந்து சங்கீத வித்வான் டைகர் வரதாச்சாரியிடம் ஒரு வருஷம் வீணை வாசிப்பதிலும், இன்னொரு வருஷம் பாட்டிலும் பயிற்சி பெற்று பரீக்ஷைகளையும் (1931-ல்) பாஸ் பண்ணியிருக்கிறார்.

இந்த சமயத்தில், காலஞ் சென்ற ஸ்ரீ. ஏ. நாராயணன் சென்னையில் முதன் முதலாக பேசும்பட ஸ்டுடியோவை ஆரம்பித்து ஸ்ரீனிவாஸ கல்யாணம் தமிழ்ப் படத்தை தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அந்த ஸ்டுடியோவுக்கு ஒலிப்பதிவாளராக வந்திருந்த போத்டார் என்பவரும் சென்னை மஹாராஷ்டிர சங்கத்தின் உப தலைவரும் நெருங்கிய நண்பராயிருந்தனர். ஒரு நாள் போத்டார் தம் நண்பரிடம் ஸ்ரீ. நாராயணன் ஆரம்பித்திருந்த ஸ்டுடியோவைப் பற்றிக் கூறி, தம் முதல் தமிழ்ப் படத்தில் நடிப்பதற்காக அவர் நடிகர்களைத் தேடிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அந்த சமயத்தில் ஸ்ரீனிவாஸ ராவ் நாடகங்களில் அடிக்கடி தோன்றி நல்ல பெயரெடுத்துக் கொண்டிருந்ததால் அவரை உப தலைவர் போத்டாரி

ஹிந்தி ஸ்டன்ட் படமொன்றில் ஸ்ரீனிவாஸ ராவ் ("சந்திரகாந்த் பி. ஏ.,"), & ரொமிளா.



"பார்வதி கல்யாணம்" படத்தில் மன்மதன் வேஷத்தில் ஸ்ரீனிவாஸ ராவ்

டம் சிபார்சு செய்தார். போத்டார் ஸ்ரீனிவாஸ ராவை நாராயணனிடம் அழைத்துச் சென்றார்.

ஸ்ரீ. நாராயணன் ஸ்ரீனிவாஸராவை அன்போடு வரவேற்றார். பின்னர் கேட்டார்:

"என்னப்பா சினிமாவில் சேர சம்மதமா?" என்று.

ஸ்ரீனிவாஸ ராவ் சம்மதம் தெரிவித்தார்.

"சினிமாவில் நடிப்பது ரொம்ப கஷ்டம். உன்னால் முடியுமா?

"ஏதோ, என்னால் முடிந்த வரை நடிக்கிறேன்."

"சரி; உனக்குப் பாடத் தெரியுமா?"

"சுமாராய்ப் பாடத் தெரியும்."

"நல்லது, எங்கே பாடு பார்க்கலாம். மூஞ்சியையும் கையையும் ஆட்டாமல் பாட வேண்டும்; தெரிந்ததா?"

**ஸ்ரீனிவாஸ ராவ்** ஸ்ரீ. நாராயணன் கூறிய விதிகளை அனுசரித்து, "சிதம்பரம் போகாமல்" என்ற பாட்டைப் பாடினார். அவருடைய பாட்டுகள் நாராயணனைக் கவர்ந்து விட்டன. ஸ்ரீனிவாஸ ஸினிடோனின் முதல் படமான **ஸ்ரீனிவாஸ கல்யாணம்** படத்தில் ஸ்ரீனிவாஸரின் வேஷத்தை நடிப்பதற்கு ஸ்ரீனிவாஸ ராவ் முன்னூறு ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டார்!

**ஸ்ரீனிவாஸ கல்யாணம்** படம் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. ஆனால் இப்படத்தின் தோல்விக்கு ஸ்ரீனிவாஸ ராவ் காரணமாயிருக்காததால் ஸ்ரீ. நாராயணனின் அடுத்த படமான **திரௌபதி வஸ்திராபஹரணத்தில்** கிருஷ்ணன் வேஷம் அவருக்குக் கொடுக்கப் பட்டது.

மேற்படி இரண்டு படங்களிலும் நடித்த பின்னர் ஸ்ரீனிவாஸராவ் ஸ்ரீனிவாஸ ஸினிடோனை விட்டுவிட்டு பூனாவுக்குச் சென்று பிரபாத் கம்பெனியார் தயாரித்துவந்த **சந்திரசேனாவில்** ராமராக நடித்தார். இந்தப் படம் அது வெளி வந்து பல வருஷங்களுக்குப் பிறகும் இணையற்ற படமாக

[தொடர்ச்சி 58-ம் பக்கத்தில்]

இராணுவப் படம் ஒன்றை ஸ்ரீனிவாசராவ் டைரெக்ட் செய்யும் காட்சி






**கி. ராமமூர்த்தி (அரக்கோணம்)**

நாம் இருவர் படத்தில் டி.ஏ. ஜெயலக்ஷ்மி பாடுவது சொந்தக் குரலிலா?

**இல்லை; பிரபல ரேடியோ பாடகி டி. எஸ். பகவதியின் 'ஸௌண்ட் பாக்ஸை' அவர் இரவல் வாங்கிக் கொண்டிருக்கிறார்.**

**ஆர். பெருமாள் (காஞ்சீவரம்)**

எனெஸ்கேயின் பைத்தியக்காரன் படத்தை என் நண்பர் பார்த்தது முதல் அவருக்கு அதே பைத்தியம் பிடித்து விட்டது. அவரை எங்கே அனுப்பலாம்?

**ஞாபக மறதியாக கீழ்ப்பாக்கத்திற்கு அனுப்பிவிடப் போகிறீர்; கிருஷ்ணன் அங்கில்லை. "பைத்தியக் காரனை" கீழ்ப்பாக்கத்திலிருந்து (நியூடோனிலிருந்து) கிளப்பி விட்டு அவர் தியாகராய நகரில் தங்கியிருக்கிறார்!**

**எஸ். ஏ. ரஹிமான் (விழுப்புரம்)**

மாடர்ன் தியேட்டர்ஸின் நான்கைந்து படங்களில் தொடர்ச்சியாக நடித்து வந்த கே. எல். வி. வஸந்தா தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியில் நடிக்காத காரணம் என்ன?

**தொடர்ச்சியாக நான்கைந்து படங்களில் அவர் நடித்து வந்ததே தான் காரணமாயிருக்கும்.**

**டி. ஜி. ராஜகோபாலன் (கும்பகோணம்)**

ஜெமினியின் மிஸ் மாலினி படத்தில் டி. கே. பட்டம்மாள் பாடிய பாட்டுகள் எவை? குமாரி ரத்னம் பாடியவை எவை?

**புஷ்பவல்லிக்கு குரல் இரவல் கொடுத்திருப்பவர் குமாரி ரத்னம். சூரிய பிரபாவுக்கு குரல் இரவல் கொடுத்திருப்பவர் பட்டம்மாள்.**

**பி. எஸ். வாஸன் (கள்ளக்குறிச்சி)**

சாந்தா ஆப்தே எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்? அவருக்கு சுத்தமாகத் தமிழ் பேசத் தெரியுமா?

**சாந்தா ஆப்தே நடித்ததெல்லாம் "சாவித்திரி" தமிழ்ப் படம் ஒன்றில் தான். அவருக்குத் தமிழ்ப் பேசத் தெரியுமோ தெரியாதோ; சமீபத்தில் ஒரு தமிழ்ப் பட முதலாளி அவரை ஒப்பந்தம் செய்யப் போனபோது ஆப்தே (சம்பள விஷயத்தில்) "ல்" காரத்தை அதி ஸ்பஷ்டமாக உச்சரித்தாராம்! பட முதலாளி பேசாமல் திரும்பி விட்டாராம்!**

**முஹமது காசிம்ஸா (விழுப்புரம்)**

கே. டி. ருக்மணியும், டி. கே. சம்பங்கியும் நடிக்கப் போவதாக விளம்பரப் படுத்தப் பட்ட புரட்சி எது வரையில் தயாராகியிருக்கிறது?

**நீர் இந்தப் படம் வரவில்லையே என்று கவலைப் படுகிறீர். ஆனால் சில பத்திரிகைக்காரர்களோ தாங்கள் வெளியிட்ட இப் படத்தின் விளம்பரப் பணம் வரவில்லையே என்று கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்!**

**எஸ். பி. ராமஸ்வாமி (ஸ்ரீவைகுண்டம்)**

"......" பத்திரிகையின் ஆசிரியர்

மட்டும் தவமணி தேவியைப் பற்றிப் புகழ்ந்து எழுதுவானேன்?

**தேவியைப் பற்றி இகழ்ந்து எழுதுவதற்கு மற்ற பத்திரிகைகள் எதுவும் பாக்கி வைக்கவில்லை போலிருக்கிறது!**

பி. பி. காளிமுத்து (விருதுநகர்)

நம் நாடு சுதந்திரம் அடைந்து விட்டதே. இனி கட்டபொம்மு சரித்திரத்தைப் படம் பிடிக்க சர்க்கார் அனுமதிக்குமா?

**இனிமேல் இதுபோன்ற சரித்திரங்களை தாராளமாய் தயாரிக்கலாம்.**

என். ஆர். ஜகதீசன் (நாகராசம்பட்டி)

பாகவதர் சிறை செல்லுமுன் ஓரளவு நடித்து விட்டுப் போயிருந்த ராஜயோகி படம் என்னவாயிற்று?

**இந்த யோகியை நித்திரையிலாழ்ந்திருக்கும்படி விட்டு விட்டு பாகவதர் (ராஜ) "முக்தி"யை நாடிச் சென்று விட்டார். "ராஜயோகி"யில் பாகவதர் நடிக்கப் போவதில்லை என்று கேள்வி.**

"மதனமாலா"வில் நடித்துள்ள வி. ராஜலக்ஷ்மி "ஷண்பகவல்லி", "அம்பிகாதேவி" முதலிய படங்களிலும் நடிக்கிறார்.

ஏ. வீ. அங்குசாமி (பொள்ளாச்சி)

எம். கே. தியாகராஜ பாகவதருக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

**பல வருஷங்களுக்கு முன்பே ஆகிவிட்டது.**

பி. ஜி. நாதன் (ஈரோடு)

குமாரி கமலா கதா நாயகியாக நடிக்கும் படம் ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறதாமே, உண்மை தானா?

**அப்படியொன்றும் காணோம். அவருடன் ஒரு கதாநாயகனைச் சேர்த்து நடிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இன்னும் நம் பட முதலாளிகளுக்கு ஏற்படவில்லை.**

"சினிமாப் பித்தன்" (மதுரை)

பைத்தியக்காரன் சினிமாக் கதையைச் சஹஸ்ரநாமம் எழுதியதாகப் போட்டிருக்கிறது. நாடகக் கதையை எழுதியவர் யார்?

**சாக்ஷாத் சஹஸ்ர நாமம்தான்.**

"மாரன்" (பண்ருட்டி)

தமிழ்ப் படங்களிலே வேதாளபுரத்தை விட மோசமான படம் இருக்கிறதா?

**இல்லை விட்டால் கவலைப்பட வேண்டாம். இனி வரப்போகும் படங்களில் ஒன்று கூடவா அதைத் தோற்கடிக்காமல் போய்விடும்!**

ஆர். வி. சவுரிராஜுலு (துறையூர்)

யூ. ஆர். ஜீவரத்தினத்தை எங்கே வெகு நாளாய்க் காணோம்? படத்தில் நடிக்கிறாரா இல்லையா?

**பேஷாய் நடிக்கிறார்; "ஸ்ரீ ஆண்டாள்" படத்தில் சந்திக்கப் போகிறீர்.**

ஏ. குமாரன் (பாலக்காடு)

தன அமராவதி படம் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே தயாராகி விட்டதென்று என் நண்பர் கூறுகிறார். அப்படியானால் வெளி வராத மர்மம் என்ன?

**சென்ற மாதம்தான் இப்படம் காட்சிக்குத் தயாராயிற்று. தீபாவளியன்று சில ஊர்களில் வெளி வந்திருக்கிறது.**

**கே. எஸ். ஸ்ரீனிவாஸன் (சேலம்)**

குண்டுசியாரே! எனக்கு சினிமா என்றால் உயிர். வாரா வாரம் போவேன், வீட்டிலுள்ளவர்களோ "சினிமா பார்க்கக் கூடாது" என்று திட்டுகின்றனர், என்ன செய்யலாம்?

**நான் சினிமாப் பார்ப்பதற்கு என் தகப்பனார் தடை விதித்ததினால் தானோ என்னவோ இன்று ஒரு சினிமாப் பத்திரிகாசிரியனாக விளங்குகிறேன்! "உம்மை" தடையின்றி சினிமாப் பார்க்க விட்டு விட்டால் சீக்கிரமாய் உமக்காகவே சினிமா மீது வெறுப்பு ஏற்பட்டு விடும்" என்பதை உம் வீட்டார் தெரிந்து கொள்ள வேண்டும்.**

**கே. சிவஷண்முகம் (வத்தலகுண்டு)**

இயற்கை வர்ணங்களில் படம் தயாரிக்கக் கூடிய ஸ்டுடியோ ஏதேனும் இந்தியாவில் இருக்கிறதா?

**இல்லை. சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு இம்பீரியல் பிலிம் கம்பெனியார் "கிஸான் கன்யா" என்ற படத்தை இந்த முறையில் தயாரித்தார்கள். ஆனால் படத்தில் (அவர்கள்) சாயம் வெளுத்துப் போயிருந்ததால் இம் முயற்சியைக் கைவிட்டுவிட்டனர்.**

**பி. நரசிம்மலு (சென்னை)**

நாம் இருவர் புகழ் குமாரி கமலாவை நான் மணக்க விரும்புகிறேன்.

**அதிருக்கட்டும்; நீர் எதில் புகழ் பெற்றிருக்கிறீர்? சினிமா நடிகை யாரையாவது மணந்து கொள்ள வேண்டும் என்று கனவு காண்பதிலா!**

**கே. ஏ. தவசியப்பன் (கோபி)**

எம். கே. கோவிந்தராஜு பாகவதர் மல்லிகா என்ற படத்தில் நடிப்பதாக பேசப் படும் வதந்தி உண்மையா?

**இதுமாதிரி என் காதில் விழும்படி யாரும் பேசவில்லை.**

**ஏ. எஸ். மணி (சென்னை)**

சினிமா உலகில் பொய் மலிந்து காணப்படுவதின் காரணம் என்ன?

**இந்தியாவின் முதல் படமே "ஹரிச்சந்திரா." அதன்பின் அடேயப்பா, எத்தனை "ஹரிச்சந்திரர்கள்" வெளிக்கிளம்பி யிருக்கின்றனர்! இவ்வளவு "ஹரிச்சந்திரர்"களும் பேசித் தீர்த்த பின்கூட, படத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பேசுவதற்கு உண்மை பாக்கியிருக்குமென்று நினைக்கிறீர்?**

டைரெக்டர்:—என்னய்யா காதல் கட்டத்தை நீர் கொஞ்சங்கூட உணர்ச்சியில்லாமல் நடிக்கிறீரே? எங்கே, அவளை உம்முடைய மனைவியாகப் பாவித்துக்கொண்டு நடித்துப் பாரும்.

நடிகர்:—அவள் உண்மையில் என்னுடைய மனைவியேதான் ஸார்!

---

**என். கல்யாணம் (புதுக்கோட்டை)**

நம் சினிமா நடிகைகளுள் அழகில் சிறந்தவர் யார்?

**நான் என்ன சொல்வது; சினிமாவில் ஈடுபட்டுள்ள அவ்வளவு நடிகைகளும் தாம்தான் "சிறந்த அழகி" என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களே!**

**ஏ. ஆர். கிருஷ்ணன் (சென்னை)**

பானுமதியின் விலாஸத்தைத் தெரிவிக்கவும். கடிதம் எழுதினால் பதில் எழுதுவாரா?

**ஒன்றரையணா செலவில் உண்மை தெரிந்து விடும்: எழுதிப் பாரும்.**

"மாரியம்மன்" தமிழ்ப் படத்தில் டி. எஸ். பாலய்யாவின் ஒரு தோற்றம்.

---

**விலாஸம்: C/o பரணி பிக்சர்ஸ், 3 ராஜம்மாள் தெரு, சென்னை. 17.**

பி. எம். ஹையது ரூஸ் தங்கள் சாஹிபு (திருவள்ளூர்)

கொல்லபாமா தெலுங்குப் படத்திலும் மஹாத்மா உதங்கர் தமிழ்ப் படத்திலும் நடிக்கும் இரு அஞ்சலி தேவிகளும் ஒரே நபர்தானா?

**ஆம்; ஒருவரேதான்.**

என். சிதம்பரம் (மதுரை)

ஐயனாரப்பன் படத்தில் ஸி. டி. ராஜகாந்தம் ராக்ஷஸியாக நடிப்பதாய் விளம்பரங்களில் பார்த்தேன். இது அவருக்கு பொருத்தமான வேஷம் அல்லவா?

**ஏன், வேஷமில்லாத பொருத்தம் என்று சொன்னால்கூடப் பொருந்துமே!**

"மன்மதன்" (பண்ருட்டி)

என் நண்பரொருவர் பானுமதிக்கு விவாஹமாகி விட்டதென்பதைப் படித்ததும் மிக ஏமாற்றம் அடைந்து விட்டார்.

**ஐயோ, பாவம்! வேண்டுமானால் பானுமதியின் கணவரிடமிருந்து ஒரு அனுதாபச் செய்தியை வாங்கி அனுப்புகிறேன்!**

ஏ. லூர்துசாமி (மேட்டூர்)

கே. பி. சுந்தராம்பாள் நடிக்கும் ஔவை ஏன் இன்னும் வெளிவரவில்லை?

**"ஔ" என்ற எழுத்தை எழுதுவதும் படிப்பதும் எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது? அப்படியிருக்க படம் மட்டும் சுலபமாக, முடிந்துவிடுமா?**

ஏ. செல்லையாபிள்ளை (கொழும்பு)

பைத்தியக்காரன் படத்தில் கிருஷ்ணன் மதுரம் இவர்களின் முகங்களைத்தான் அதிக நேரம் பார்க்க வேண்டியிருக்கிறது.

**சிறிது காலம் இவ்விருவர் முகங்களும் படங்களில் தோன்றாமலிருந்ததற்கு இதைப் பரிஹாரமாக பாவித்துக் கொள்ளலாம்.**

டி. வி. கோபாலன் (தியாகராயநகர்)

"பேசும் படம்" ஆசிரியர் மின்மினியைத் தயாரிக்கிறாரே. நீரும் ஏன் ஒரு படம் எடுக்கக் கூடாது?

**தம் பத்திரிகையின் பெயரிலேயே 'படம்' இருப்பதால் அவருக்கு எடுப்பதும் சுலபமாகியிருக்கலாம்! ஆனால் பண முதலாளிகள் என் 'பெயரை'க் கேட்டதுமே நெருங்கத் தயங்குகிறார்களே; ஸ்வாமி!**

பி. கே. எஸ். சிவம் (தாத்தையங்கார் பேட்டை)

சில சினிமா நடிகைகள் தங்கள் பெயருடன் 'தேவி' என்று சேர்த்துக் கொண்டிருக்கிறார்களே? "தேவி" என்பது பட்டமா?

**இல்லையில்லை. முன்பெல்லாம் "பாய்"களும் "லக்ஷ்மி"களுமாய் இருந்த பெயர்கள் இப்பொழுது 'தேவி'மயமாகி வருகின்றன. இதில் ஒரு விஷயம்; "தேவி" என்ற பெயர்களையுடைய அநேகரும் "ஆடை விஷயத்தில் சிக்கன புத்தி" உடையவர்களாயிருப்பதால் "தேவி" என்ற பதத்திற்கு "ஆடை சிக்கனக்காரி" என்று நீர் அர்த்தம் கற்பித்துக் கொண்டு விடக்கூடாது!**

**பி. ரங்கராஜு (புதுக்கோட்டை)**

பி. ஜி. வெங்கடேசன் திரை உலகில் காணப்படாததேன்?

**கவலை வேண்டாம். அவர் மட்டுமல்ல; அவருடன்கூட ஒரு கழுதையும் "ஜம்பம்" படத்தில் தோன்றப் போகிறது!**

**மொஹிதீன் ராவுத்தர் (கொழும்பு)**

டி. ஆர். மஹாலிங்கம் பாகவதர் இப்பொழுது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

**பலே! அவரே "பாகவதர்" என்று வைத்துக் கொள்ளுவதற்குப் பதில் நீரே சேர்த்துவிட்டீரா! அவர் இப்பொழுது "வேதாள உலகம்," "ஞான சௌந்தரி" ஆகிய படங்களில் நடித்து வருகிறார். அதன் பிறகு "பாம விஜயம்" "புலந்திரன்" "பவழக் கொடி" ஆகிய படங்களில் நடிக்கப் போகிறார்.**

**குரப்பா (காஞ்சீவரம்)**

மின்மினிப் பெண்—மயக்கு நக்ஷத்திரம்—மேனகாவின் வாழ்க்கை வரலாறை தெரிவிக்க முடியுமா?

**"கங்கண"த்தில் தோன்றும் மேனகாவின் படம் இவ் ஊசியின் அட்டை மீது வெளியிடப் பட்டிருக்கிறது. ஆனால் அவர் "மின்மினிப்பெண்ணை" "மயக்குவாரா" "மாட்டாரா" என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. படத்தில் தோன்றுவதற்கு முன்பே ஒருவரைப் பற்றி நான் வாழ்க்கை வரலாறு எழுதும் வழக்கமில்லை.**

**வி. கே. ஷண்முகம்**
**(மேட்டுப் பாளையம்)**

என். எஸ். கிருஷ்ணன், பாகவதர் விடுதலை அடைந்ததால் பி.யு. சின்னப்பாவுக்குக் கவலை ஏற்பட்டிருப்பது உண்மையா?

**நான் அப்படி நினைக்கவில்லை. சினிமாவில் சம்பாதித்ததை புத்திசாலித்தனமாகச் சேர்த்து வைத்துக்கொண்டிருப்பவர்களில் சின்னப்பா ஒருவர். ஆதலால், சினிமாமூலம் இனிமேல் சம்பாதிக்க முடியா விட்டால்கூட அவர் கவலைப்பட மாட்டார்.**

**வி. எஸ். துரை**
**(அச்சுவேலி, யாழ்ப்பாணம்)**

பணம் சம்பாதிப்பதற்கன்றி கலை அபிவிருத்திக்காக சினிமாவில் சேர்ந்துள்ளவர் எவரேனும் உண்டா?

**இத்தகைய நோக்கமுடைய அந்த அதிசய மனிதரை சென்ற பத்து வருஷ காலமாக நான் தேடிக்கொண்டிருக்கிறேன்; அகப்பட்டால்தானே!**

**கே. பி. எம். இஸ்மெயில்**
**(மாயவரம்)**

"ஆடுவோமே" என்ற பாட்டின் உள்ள "பள்ளு" என்று பதத்திற்கு என்ன அர்த்தம்?

பள்ளு என்ற பதத்திற்கு பாட்டு என்பது பொருள்.

**பி. டி. சுந்தரராஜ்**
**(கோயமுத்தூர்)**

தற்சமயம் தவமணி தேவி என்ன

---

**பொங்கலன்று வெளிவர விருக்கும் "கங்கணம்" தமிழ்ப் படத்தில் ஒரு காதல் காக்ஷி (கே. ஆர். ராமசாமி, மேனகா.)**

செய்து கொண்டிருக்கிறார்? ஏன் சினிமாவில் நடிப்பதில்லை?

**ஓய்வு கிடைத்திருப்பதால் தம்மை நாடிவரும் அத்தனை பத்திரிகைக்காரர்களுக்கும் தாராளமாய் பேட்டி அளித்து வருகிறார்! புதிய தணிக்கை விதிகளுக் கிணங்க படங்களில் தோன்றுவதற்காக அவர் ஆடை உடுக்கப் பழகி வருவதாகக் கூறும் செய்தி உண்மையாகவும் இருக்கலாம்!**

ஏ. வி. எஸ். மணியன்

(ரக்வான், இலங்கை)

"குடும்ப ஸ்திரீகள் சினிமாவில் சேரலாமா, கூடாதா?" என்ற விவாதத்தை ஆரம்பித்து அதை நடிகர்கள், நடிகைகள், குடும்பஸ்திரீகள் ஆகியோரைக் கொண்டே வாதிக்கும்படி செய்தாலென்ன?

**விவாதம் அவசியமேயில்லை. குடும்ப ஸ்திரீகள் சினிமாவில் சேருவதற்கு முன், "சேரலாமா, வேண்டாமா?" என்று யாரிடமும் கேட்பதுதான் கிடையாதே!**

கே. ஷேக் ஆதம் (திருவள்ளூர்)

பி. யு. சின்னப்பா கத்திச் சண்டை, மல்யுத்தம், சிலம்பம் இவற்றை யெல்லாம் யாரிடம் கற்றுக் கொண்டார்?

**யாரிடம் கற்றுக் கொண்டாரோ தெரியவில்லை. ஆனால் பட ரஸிகர்களைவிட படமுதலாளிகளிடம் அவர் இந்த வித்தைகளை அதிகமாகக் காட்டியிருக்கிறார் என்பதென்னமோ தெரிந்த விஷயம்!**

கே. சங்கரன் (கும்பகோணம்)

பி. கண்ணம்பா, எம். எஸ். சரோஜினி, டி. ஆர். ராஜகுமாரி இவர்களில் பாட்டு, பேச்சு, நடிப்பு ஆகிய அம்சங்கள் ஒருங்கே அமைந்தவர் யார்?

**இவ்வம்சங்கள் அனைத்தும் பரிபூரணமாய் அமைந்தவர் யாருமில்லை. ஆனால் இவை ஏறக்குறையவாவது அமைந்துள்ளதால்தான் இவர்கள் பிராபல்யம் அடைந்திருக்கின்றனர்.**

பி. சிவம் (கல்கத்தா)

ஒருவருடைய ஜீவியத்தில் காதல் திருமணம் ஏதாவது புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்துமா?

**நிச்சயம் ஏற்படுத்தும். "மற்றவர்கள் சிரமப் படாமல் செய்து கொள்ளும் திருமணத்தை நாம் இவ்வளவு சிரமப்பட்டுச் செய்து கொள்ளவேண்டியதாயிற்றே" என்ற வருத்தம் தோன்றவே செய்யும்!**

ஆர். சங்கர் (திருவனந்தபுரம்)

குமாரி கமலாவின் விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

**"அப்பு முதலி தெரு, மைலாப்பூர், சென்னை" என்பது அவருடைய விலாஸம். ஆனால் நக்ஷத்திரங்களுக்குக் கடிதம் எழுதுவதென்றால் கண்யமான முறையில் எழுதவேண்டுமென்பதையும் கூடவே தெரிவிக்கிறேன்.**

கனகு (புதுக்கோட்டை)

நம் சினிமா நடிக, நடிகைகள்

**"மஹா பலி" தமிழ்ப் படத்தில் சுக்ராச்சாரியாக நடிக்கும் புது நடிகர் எம். கே. ராஜகுமார்.**

புகழை அடைவதற்குப் பல இடையூறுகளை நீந்திக் கடக்க வேண்டியிருக்கிறதல்லவா?

**உண்மைதான். ஆனால் இதுபோல நீந்தி வெற்றி பெற்றவர்கள்கூட, நீந்தும் காட்சியில் நடிக்க வேண்டி வரும்போது, குளத்தில் முழங்கால் அளவுக்குமேல் தண்ணீர் இருந்தால் பயப்படுகிறார்கள்!**

### தி. ந. உமாபதி (கோவை)

நடிக, நடிகைகளின் குற்றங்குறைகளை பாரபட்சமின்றி எடுத்துச் சொல்கிறீர்களே? அவர்கள் உங்கள்மீது வெறுப்புக் கொண்டால்...?

**சில சமயங்களில் என்மீது சிலருக்கு வெறுப்பு ஏற்படுவது உண்மைதான். ஆனால் அவர்களைப் பற்றிய நல்ல விஷயங்களையும் இதேபாரபட்சமற்ற முறையில் வெளியிடுவதால் இந்த வெறுப்பு நிரந்தரமாயிருப்பதில்லை.**

### கே. ஜெயசீலன் (மாயவரம்)

கொக்கோ நடித்த முதல் படம் எது? கடைசிப் படம் எது?

**அவர் முதன் முதலில் "மதருஸ் மெயில்" படத்தில் தோன்றினார். கடைசியாக நடித்தது "செஞ்சுலக்ஷ்மி"யுடன் காட்டப்படும் துண்டுப் படத்தில்.**

### எஸ். பொன்னுதுரை (யாழ்ப்பாணம்)

என் நண்பனொருவன் தன் காதலியை "பர்மா ராணி" என்று அழைக்கிறான்; இதன் அர்த்தம் என்ன?

**தன்னை மற்றவர்கள் "ஹொன்னப்பா" என்று அழைக்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம் போலும்!**

### அ. பக்கிரிசாமி (பண்ருட்டி)

குமாஸ்தாவின் பெண் படத்தில் நடித்த அதே எம். எஸ். திரௌபதி தானா இப்பொழுது பில்ஹணன்படத்தில் நடித்துக் கொண்டிருப்பவர்?

**இருவரும் ஒரே நபர்தான். டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகங்களில் தோன்றும் திரௌபதியும் இவரேதான்.**

கந்தன் கம்பெனியாரின் "ஜீவகன்" தமிழ்ப் படத்தில் நடிக்கும் வி. செல்லம்.

### எம். தலீல் (இரத்தினபுரி, இலங்கை)

எனக்கு வயது 17. ஓரளவு நடிக்கத் தெரியும். நான் சினிமாவில் சேர முடியுமா?

**சினிமாவில் சேர உமக்கு சந்தர்ப்பம் கிடைப்பதாயிருந்தால் இதைவிட அதிகமான வயதுகூட குறுக்கே நிற்காது. ஆனால், உமக்குச் சந்தர்ப்பம் வாய்க்க வேண்டுமே; அதைப் பற்றித்தான் என் சந்தேகமெல்லாம்.**

### வி. லக்ஷ்மி நாராயணன் (காரைக்குடி)

சின்னப்பா குதித்துக் கொண்டே நடிப்பது உத்தமபுத்திரனிலா அல்லது மனோன்மணியிலா?

**சின்னப்பா குதித்து நக்ஷத்திரப் பதவியை எட்டிப் பிடித்தது "உத்தமபுத்திரனி"ல் என்றாலும், குதித்துக் கொண்டே நடித்தது "மனோன்மணி"யில்தான்.**

**கே. ஆர். புருஷோத்தமன் (சென்னை)**

எம். கே. தியாகராஜ பாகவதர் கதர் அணிபவர்; காங்கிரஸ் அபிமானி; என்று அறிகிறேன். வாஸ்தவமா?

**வாஸ்தவம்தான் என்று நானும் நினைக்கிறேன்.**

**"பேனு" (திருவனந்தபுரம்)**

நீங்கள் "பேசும் பட"த்தை விட்டு ஏன் விலகினீர்கள்?

**எண்ணத்திலும் எழுத்திலும் என் சுதந்திரத்தை நானுக வளர்த்து வந்தேன். ஆனால், மேற்படி பத்திரிகைக்கு ஆசிரியராகச் சென்றது முதலே எனக்கு தொழிலிலும் சுதந்திர உணர்ச்சி வளரும்படி ஸ்ரீ. ராம்நாத் செய்து வந்தார். அந்த உணர்ச்சி எல்லையை மீறியதின் விளைவாகவே "குண்டூசி" பத்திரிகை தோன்றியிருக்கிறது.**

**பி. விஜயராமலிங்கம் (விருவீடு)**

பி. யு. சின்னப்பா தற்போது எந்தப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிருர்?

**"கிருஷ்ண பக்தி", "ரத்ன குமார்," "மங்கையர்க்கரசி", "சுதர்சன்" ஆகிய படங்களில் நடித்து வருகிருர்.**

**கண்ணன் (தெங்கம்புதூர்)**

டி. எஸ். பாலையா அநேகமாக எல்லாப் படங்களிலும் இறுதியில் உதைபடுகிருர், அல்லது உயிரையே தியாகம் செய்கிருர். இதன் காரணம் என்ன?

**சினிமா உலகில் 'சிறந்த தியாகி' என்ற கியாதியைப் பெற வேண்டுமென்ற நோக்கமாயிருக்கலாம்.**

**வி. கணேசன் (திரிச்சி)**

அபூர்வ சித்தாமணி ஆயிரம் தலைகளை வாங்குகிருளாமே; இது லேசான காரியமா?

**லேசில்லைதான். ஆனல் அந்த ஆயிரம் முகம் ராம்குமார் மட்டும் இந்த சிந்தாமணியிடம் அகப்பட்டிருந்தால் வேலை வெகுசுலபமாய்முடிந்து போயிருக்குமல்லவா?**

**ஏ. கௌசல்யா வேதாந்தம் (தாம்பரம்)**

தமிழ்ப் படங்களில் பாட்டுகள் அதிகமாய் இருப்பதின் காரணம் என்ன?

**நம் பட முதலாளிகள் திரும்பத் திரும்ப தாங்கள் எடுத்து வரும் புராணப் படங்களை ஓட்டுவதற்கு சங்கீதத்தை ஒரு சவுக்காக உபயோகித்து வருகிருர்கள் என்பது தெரிந்த விஷயம் தானே.**

**டி. ஆர். ராமச்சந்திரன் (உதகமண்டலம்)**

குண்டூசியாரே! நீங்கள் அரசியலில் தலையிடுவதில்லையா?

**எனக்கென்னவோ அந்தத் தலைவேலையெல்லாம் பிடிப்பதில்லை. "அரசியலானது தூர இருந்து ரஸிக்க வேண்டிய விஷயம்" என்பது என் கருத்து.**

**என். ஜெயலக்ஷ்மி (ரத்தோட்டை, இலங்கை)**

எஸ். டி. சுப்புலக்ஷ்மியின் சொந்த ஊர் எது? கலியாணமாகி விட்டதா? தற்போது ஏதேனும் படத்தில் நடிக்கிருரா?

**சுப்புலக்ஷ்மியின் சொந்த ஊர் ஸ்ரீ வைகுண்டம். இந்த வைகுண்டலக்ஷ்மி சிவகுமாரனை மணந்து கொண்டது இப்பொழுது ஆச்சரியத்தை அளிக்காத பழைய விஷயமல்லவா? தற்போது எஸ். டி. எஸ். எந்தப் படத்திலும் நடிக்கவில்லை.**

**கே. திருநாவுக்கரசு (பன்ருட்டி)**

சுதந்திர தினக் காட்சிகளை சென்னையில் எடுத்தார்களே. அது எந்தத் தியேட்டரிலாவது காண்பிக்கப் பட்டதா?

**தென்னிந்திய பிலிம் சேம்பரின் சார்பாக இக் காட்சிகள் எடுக்கப்பட்டு, நான்கு பாஷைகளில் தயாராகி இருக்கிறது. ஆனல் ஏனே வெளிவரத்தான் இல்லை!**

**ஜி. பி. என். (நெல்லிக்குப்பம்)**

சினிமா நடிகைகளை நான் தனியாகச் சந்திக்க முடியுமா?

**முடியாது; அவர்கள் 'தனியாக' இருந்தால்தானே, ஸ்வாமி!**

பேசும் படம்

"ஞான சௌந்தரி"யில்
ஞான சௌந்தரியாக நடிக்கும்
எம். வி. ராஜம்மா.

"ஞானசௌந்தரி"யில்
பிலேந்திரனாக நடிக்கும்
டி. ஆர். மஹாலிங்கம்

இடது புறம் – "வேதாள உலக"த்தில் மஹாலிங்கம், மங்களம்.

வலதுபுறம் - "அபூர்வ சிந்தாமணி"யில் வரலக்ஷ்மி, வி. என். ஜானகி

★



இடது புறம்:
திருமழிசை ஆழ்வாரும் கணிகண்ணனும்.
(தண்டபாணி தேசிகர், எம். எஸ். வேலப்பா)

★

வலது புறம்:
"சம்ஸார நௌகா" தம்பதிகள்
பி. ஆர். பந்துலு,
டி. பிரேம்வதி

●●●

"கங்கணம்" படத்தில்
லக்ஷ்மியாக நடிக்கும்
வி. செல்லம்

"ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி"யில் இவர் நடனமாடுகிறார்

"ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி"யில்
நடிக்கும் வரலக்ஷ்மி

# நுனிப்புல்

## வெட்டுக்கிளி

சென்ற "ஊசி"யில் சினிமா ஆசிரியர்கள் செய்யும் "முதன் முதல்" தவறை எழுதியிருந்தேன். இவர்களோடு சில ரேடியோப் பகுதி ஆசிரியர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. கண்ணால் பார்த்து 'முதன் முதலாக' தவறு செய்பவர்கள் அவர்கள். இவர்களோ காதால் கேட்டுத் தவறு செய்பவர்கள். இருவருக்கும் இது தான் வித்தியாசம்.

* * *

ஒரு ரேடியோ விமர்சனப் பகுதி ஆசிரியர், "ஒன்பதாம் தேதி ஞாயிறன்று இரவு ஸ்ரீமதி ஹம்ஸ தமயந்தி பாடியதாக நான் எழுதியது தவறு. கச்சேரியின் ஆரம்பத்திலும் முடிவிலும் நான் கேட்க முடியாமல் போனதின் விளைவு இது.' அன்றைய தினம் ஹம்ஸ தமயந்தி ரேடியோவில் பாடவில்லை. அவருக்குப் பதிலாக ஸ்ரீமதி வி. என். விஜயலக்ஷ்மி பாடினார்" என்று எழுதியிருக்கிறார்.

"அன்றைய தினம் பாடியவர் விஜயலக்ஷ்மிதானா?" என்று ஒரு நேயர் மேலும் சந்தேகிக்கிறார்! மேற்கூறிய விமர்சகரின் பகுதியை தவறாமல் படித்துவரும் அவர் 'இதுவும் சரியான செய்திதானா' என்று சந்தேகித்ததில் ஆச்சரியமென்ன?

* * *

மேற்சொன்ன விமர்சகராவது தம்மைத் திருத்திக் கொண்டு ஒரு தினுசாக சமாதானம் கூறியிருக்கிறார். மற்றொரு பிரபல வாரப் பத்திரிகையின் ரேடியோப் பகுதி ஆசிரியர், "......நாதஸ்வரம் வெகு இனிமையாக இருந்தது" என்று எழுதினார். மறுநாள் அக் குறிப்பிட்ட வித்வானிடமிருந்து பத்திரிகையின் ஆசிரியருக்கு ஒரு கடிதம் வந்ததாம். அதில், "நான் உங்கள் பத்திரிகையின் ரேடியோ விமர்சனத்தைப் படித்து ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால் அன்றைய தினம் நான் ரேடியோவில் நாதஸ்வரம் வாசிக்கவேயில்லை" என்று தெரிவித்திருந்தாராம்!

* * *

இன்னொரு ரேடியோ விமர்சகர் "......படத்தைக் குறித்து ரேடியோவில் பேசிய அம்மாளும் இது ஒரு நல்ல படம் என்றே கூறினார்" என்று எழுதினார். "வானொலி"யில் அவ் விமர்சகரின் பெயர் ஒரு பெண்மணியினுடையதாகத்தான் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் அன்று படத்தை விமர்சனம் செய்தவரோ ஒரு ஆண் பிள்ளை!

* * *

இதே விமர்சகர் மற்றொரு இளம் பாடகருடைய கச்சேரியை விமர்சனம் செய்திருந்தார். அந்தக் குறிப்பிட்ட இளம் பாடகரை நேரில் பார்த்து, "விமர்சனம் பார்த்தியா?" என்று கேட்டார். "ஓ, பார்த்தேன். நீங்கள் 'நன்றாயிருந்தது.' என்று எழுதியிருந்த உருப்படியை மட்டும் நான் பாடவேயில்லை!" என்றார், சிரித்தபடியே! பாவம், 'வானொலி'யில்

கண்டிருந்தபடி பாடகர் பாடாதது அவருடைய தப்புதானே!

* * *

"முதன் முதல்" தவறுகளைக் குறிப்பிட்டதன் விளைவாக இப் பகுதியை "முதன் முதலாக"ப் பார்ப்பதென்று சிலர் தீர்மானித் திருக்கிறார்களாம். தங்கள் தவறை "முதன் முதலாக" திருத்திக் கொள்வதற்கும் சிலர் ஆரம்பித் திருக்கிறார்களாம். நல்ல காலம்தான்.

* * *

ஆனால் ஒரு விமர்சகர் மட்டும் இதையெல்லாம் பொருட்படுத்தப் போவதில்லை என்று தோன்றுகிறது. அவர் எழுதியுள்ள **மகாத்மா உதங்கர்** பட விமர்சனத்தில், "இதுதான் ஜி. பட்டு ஐயர் டைரெக்ஷனில் வெளிவரும் முதல் படம்" என்று எழுதியிருக்கிறார். "ஏதோ **இன்பசாகரன்** தான் எரிந்து போய் விட்டதென்றால் **மன்மத விஜயத்தை**யும் மறைக்க ஏன் சூழ்ச்சி செய்கிறார் இவர்" என்று கேட்கிறீர்களா? அறியாமையின் விளைவை சூழ்ச்சி என்று நீங்கள் எண்ணிக் கொண்டால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல!

* * *

சென்ற ஊசியில் "குமாரி கமலாவா, பேபி கமலாவா" என்ற பிரச்னையைப் பற்றி எழுதியிருந்தேன். ஆனால், இந்த விஷயத்தில் குழப்பம் ஏற்படுத்தும் நிலைமை மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் **ராமராஜ்யத்தில்** தோற்றமளிக்கும் கமலாவை எப்படிக் குறிப்பிடுவது? **ராமராஜ்யத்தில்** நடிக்கும்போது கமலா பேபியாகத்தானே இருந்தாள்!

* * *

**ராமராஜ்யத்தின்** மூலம் 'மேனா' தாம் மிகுந்த தைரியசாலி என்று நிரூபித்து விட்டார். இப்படத்திற்கு தமிழ்க் குரல் கொடுத்தவர்களின் பெயர்களை யெல்லாம் அவர் தைரியமாய் விளம்பரப் படுத்தியிருக்கிறார். இதுமற்ற பட முதலாளிகளுக்கு ஒரு வழி காட்டியாகும்!

* * *

குரல் இரவல் வாங்குவது படவுலகில் பகிரங்க ரகஸியமாகி விட்டது. குரல் இரவல் கொடுத்தவர்களின் பெயர்களை போட்டால் படம் பாதிக்கப்படுவதுமில்லை. அப்படியிருக்க மற்ற பட முதலாளிகளும் ஏன் இது போலவே பெயரைத் தெரிவிப்பதில்லை என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

* * *

சமீபத்தில் இரு பாங்கிகள் முழுகிப் போனதின் காரணம், இவை படக் கம்பெனிகளுக்கு கடன் கொடுத்ததின் விளைவு தான் என்று கூறிக் கொள்ளுகிறார்கள்.

இப்படிக் கம்பெனிகளுக்குக் கடன் கொடுத்து முழுகுவதை விட பாங்குகளே படங்களைத் தயாரிக்க முற்பட்டால் இதே நிலைமையை சீக்கிரத்தில் அடைந்து விடலாமல்லவா!

* * *

மேற்படி பாங்குகளில் பணம் போட்டிருந்த பொது ஜனங்கள் வருந்தியிருக்க, 'தான் சேர்த்து வைத்திருந்த கொஞ்ச பணமும் போயிற்றே' என்று ஒரு பட முதலாளியும் வருந்துகிறாராம்!

* * *

"பாகவதர் சொந்த பொறுப்பில் தயாரிக்கும் **ராஜமுக்தி**யில் கிருஷ்ணன் மதுரம் இல்லாமலா போவார்கள். சிறையில் கூட இருந்த கிருஷ்ணனை படத்திலும் கூப்பிடாமலா போவார்; பருப்பில்லாமலா கலியாணம்" என்று முன்பு ஒரு பத்திரிகை எழுதியிருந்தது. எழுதிய போது அவருக்கு பருப்பு கிடைக்காமல் படும் கஷ்டம் ஞாபகத்திற்கு வரவில்லை. இப்பொழுது பருப்பில்லாமல்தான் பாகவதர் 'கலியாண'த்தை நடத்தத் தீர்மானித் திருக்கிறார்!

என். எஸ். கே. படத்தில் மட்டும் நடிகரல்ல; வாழ்க்கையிலே அதைவிட பலே நடிகர். சமீப காலமாக, தம் அரசியல் கொள்கை என்னவென்பதை மறைப்பதற்காக அவர் பல தமாஷ்களைச் சிருஷ்டித்து வருகிறார். ஒரு பக்கம் ராஜாஜி வரவேற்பில் கலந்துகொண்டு "கிந்தனார்" காலக்ஷேபம் செய்கிறார். இன்னொரு பக்கம் திராவிடநாட்டுக் கூட்டத்தில் நடுநாயகமாய் விளங்குகிறார். கிருஷ்ண பரமாத்மாவின் லீலா விநோதங்களை விட இந்த சினிமாக் கிருஷ்ணனின் 'லீலைகள்' பெரும் தமாஷாயிருக்கிறதல்லவா!

* * *

என். எஸ். கிருஷ்ணன் வாழ்க்கையில் நடக்கும் ஹாஸ்ய சம்பவங்களையெல்லாம் படங்களில் புகுத்தி விடுவது வழக்கம். சமீபத்தில் அவரது ஜெயில் அனுபவங்களைப் படத்தில் பார்த்த ஒரு நண்பர், "கிருஷ்ணன் தற்போது அனுபவித்து வரும் மாம்பலம் கொசுக்கடியைப் பற்றியும் படத்தில் புகுத்துவாரா?" என்று கேட்கிறார். மாம்பலம் கொசுக்கள் கடிக்க ஆரம்பித்தால் அது நிச்சயம் தமாஷாயிராது—என்பது இந்த நண்பருக்குத் தெரியாது, பாவம்!

* * *

சென்னையில் இருக்கும் "அம்பட்டன் வாராவதி"யின் கதை விசித்திரமானது. ஹாமில்டன் பிரிட்ஜ் என்பது அம்பட்டன் வாராவதியாக வழுவி, மீண்டும் ஆங்கில மொழியில் "பார்பர்ஸ் பிரிட்ஜ்" ஆகி இருக்கிறது.

இதே போல சினிமா உலகிலும் ஒரு உதாரணம் கிடைத்திருக்கிறது. ஏவி.எம். ஸ்டுடியோக்காரர்கள் படங்களுக்கு வெற்றியின் சின்னமான 'வி'யைச் சேர்த்து நம்பரிடுகிறார்கள். தற்போது தயாரிக்கும் சமூகப் படத்திற்கு "வீ-த்ரீ" என்று நம்பரிட்டிருக்கிறார்கள். இந்த நம்பரை சிலர் படத்தின் பெயரென நினைத்து "நாம் மூவர்" என்று தமிழில் மொழிபெயர்த்தும் விட்டார்கள்! எல்லாம் "வீ-டு" வால் வந்த வினை!


மதுரையில்
நாகரீக ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்

**நீல மாளிகை**

கே. எஸ். பெருமாள் முதலியார்
& சன்

3/4, தெற்கு சித்திரை வீதி, மதுரை

# பொதுஜனம் பேசுகிறார்

### * மோசடி விளம்பரம்

ஒரு தியேட்டரில் ஒரு படம் காண்பிக்கப்பட்டு வரும்போது, "இன்றே கடைசி" என்று விளம்பரப் படுத்துகிறார்கள். ஆனால் அதன் பின்னும் பல நாட்கள் படம் காண்பிக்கப்படும்! இது படத்தின் வசூலை அதிகரிப்பதற்காகவும், சீக்கிரமாய் அதிக வசூலை அடைவதற்காகவும் தியேட்டர்காரர்கள் கையாளும் தந்திரமாகும். இப்படிச் செய்வதன் மூலம் அத் தியேட்டர்காரர் கொஞ்ச காலத்திற்கு அனுகூலமடையலாம். ஆனால் நாளடைவில் பொதுஜனங்களின் நம்பிக்கையை தாம் இழந்து விடுகிறோம் என்பதை அத் தியேட்டர்காரர் அறிவதில்லை.

இதனால் பொது ஜனங்கள் மிகுந்த அசௌகரியத்திற்கு ஆளாகிறார்கள். "இன்றே கடைசி" என்ற விளம்பரத்தைப் பார்த்தவுடன் அப்படத்தை கடைசியாக ஒரு முறை பார்க்க வேண்டுமென எண்ணிக்கொண்டிருப்பவன் தனக்குள்ள அநேக வேலைகளை விட்டு விட்டுச் சென்று படத்தைப் பார்க்கிறான். ஆனால் மறுநாளும், அதற்குப் பிறகும் அதே படம் காட்டப்பட்டால் அவன் அத் தியேட்டரைப் பற்றி என்ன நினைக்கக் கூடும்? இதற்கு மாறாக அந்தப் படத்தை மீண்டும் பார்க்க விரும்பாதவன் இந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, சில நாட்களுக்குப் பிறகு, "புதுப் படம் நடந்து கொண்டிருக்கும்" என்ற எண்ணத்தோடு அக் கொட்டகைக்குள் நுழைந்து அதே படத்தைப் பார்த்தானானால் அவன் அத் தியேட்டரைப் பற்றி மோசமாக கருதுவான் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமுண்டா? இது போன்ற பொய் விளம்பரங்கள் அத் தியேட்டரின் புகழைக் கெடுத்து விடும் என்பதை அதன் சொந்தக்காரர் உணர வேண்டியது அவசியம்.

—மு. ராமசாமி
மதுரை.

### அவசரம் ஏன்?

தற்காலத்தில் தென்னாட்டு சினிமாக் கலை வெகுவாக முன்னேறியிருக்கிறது என்றே சொல்லலாம். எனினும் ரசிகர்களின் மனம் பண்பட்டதாகக் காணோம். அநேகமாக எல்லாப் படங்களிலும் முடியும் தருவாயில்தான் அழகான பாடலோ அல்லது நாட்டியமோ (உதாரணம்-சாவித்திரி, ஹரிதாஸ், நாம் இருவர் போன்றவை) காணப்படுகிறது. ஆனால் ரஸிகர்களோ கடைசிக் கட்டம் வந்தவுடனே அது பாட்டாயிருப்பினும், நாட்டியமாயிருப்பினும் தங்கள் ஆசனத்தை விட்டு எழுந்திருக்க ஆரம்பித்து விடுகின்றனர். இதனால் எல்லா ரஸிகர்களும் அந்தக் கடைசி அம்சத்தை ரஸிக்க முடியாமற் போகிறது. "ஆக்கப் பொறுத்தவன் ஆரப் பொறுக்க வேண்டாமா?" ஆகையால் படம் பார்ப்பவர்கள் படம் முற்றிலும் முடிந்து 'சுபம்' என்று திரையில் காண்பித்த பிறகு எழுந்து சென்றால் எல்லோருக்கும் சௌகரியமாயிருக்கும். அவர்கள் 4, 5 நிமிஷங்கள் முன்னதாகவே வெளியில் செல்வதால் அவர்களும் படத்தின் கடைசி கட்டத்தை ரஸிக்க முடியாமற் போகிறது. அவர்கள் எழுந்து செல்லுவதால் ஏற்படும் ஆரவாரத்தால் மற்றவர்களும் ரஸிக்க முடியாமற் போய்விடுகிறது. இனியாவது இதை ரஸிகர்கள் கவனிப்பார்களாக.

—தி. நா. அரங்கராசன்
ஆலந்தூர்

### பெருத்த அவமானம்?

அநேக வியாபாரிகள் தங்கள் வியாபாரம் பெருகுவதற்காக விளம்பரம் செய்கிறார்கள். இம்மாதிரி விளம்பரம் செய்வது நல்லதுதான். ஆனால் சிலர் பிரபல தேசியத் தலைவர்களின் படங்களை "ஸ்லேடு"களில் எழுதி விளம்பரம் செய்கிறார்கள். உதாரணமாக பண்டித ஜவஹர்லால் நேருவின் படத்தை எழுதி, அதன் மேல் "பீடி

பரிசு பெற்ற கடிதம். எழுதியவர் :—மு. ராமசாமி, மதுரை.

சக்கரவர்த்தி" என்ற எழுத்துக்களுடன் விளம்பரம் செய்கிறார்கள். இம்மாதிரியாக விளம்பரம் செய்வது நம் தலைவர்களின் புகழையும், கௌரவத்தையும் கேவலப் படுத்துவதாகும். இனிமேலாவது இம்மாதிரி விளம்பர ஸ்லைடுகளை தியேட்டர்காரர்கள் காட்ட மறுக்கவேண்டும்.

—ஆர். எம். சுந்தரம்
மதுரை

ஸ்திரீகள் ஏன் பார்க்கக் கூடாது?

அக்டோபர் மாத "குண்டூசி"யில் சகோதரி மங்கையற்கரசி "பெண்கள் சினிமா பார்த்தால் அவர்கள் மானம் மரியாதை எல்லாம் மறைந்துவிடும்" என்று எழுதியிருக்கிறார். இதை எந்த சகோதரியும் ஒப்புக்கொள்ளவே மாட்டார். பெண்களாகிய நாம் நம் மானத்தைக் காத்துக்கொள்ள சக்தியற்றவர்களாகவா போய்விட்டோம்? ராணி லெட்சுமிபாய் பிறந்த நாட்டிலல்லவா நாம் பிறந்திருக்கிறோம். நம் தேகத்தில் ஓடும் ரத்தம் வீர ரத்தமல்லவா? அப்படி தன்னை அறியாமலா மரியாதை, மானம் மறைந்துவிடும்?

ஆனால் சகோதரி கூறியுள்ள மற்ற விஷயங்கள் மறுக்கக் கூடியவையல்ல. ஆபாசமான காட்சிகள் நம் படங்களில் தலைவிரித்தாடுகின்றன. கள்ளக் காதல்களையும், லீலைகளையும் காட்டி நம் பெண் குலத்தையே இழிவுபடுத்தத்தான் செய்கிறார்கள். அந்தக் காதல் கட்டங்களைப் பார்த்து நம் மானம், மரியாதை போய்விடுமென்று சொல்லுவதுதான் பொருந்தாது. இனிமேலாவது நம் பட முதலாளிகள் பெண் குலத்தை இழிவுபடுத்தும் படங்களை யெடுக்காமல் நம் சுதந்திர இந்தியாவில் பெண்களின் வீரச் செயல்களையும் சக்திகளையும் விளக்கும் படங்களை பட முதலாளிகள் தயாரிக்க

ராகினி பிக்சர்ஸாரின் "பக்த ஜனா" தமிழ்ப் படம் அநேகமாக முடிவடைந்துவிட்டது. இப்படத்தில் காமெடியன் கே. ஸ்ரீநிவாஸ், சாந்தகுமாரி, காமெடியன் கே. சாரங்கபாணி, கணபதி பட் தோன்றும் ஒரு உருக்கமான காக்ஷி இது.

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

—மு. செல்லம்மாள்
அம்பலசேரி

குத்தட்டும் "குண்டுசி"

ஆண்களாலேயே டைரெக்ட் செய்யப்பட்டு, (அதுவும் படித்த பி. ஏ., எம். ஏ. பி., எஸ்ஸி. (ஆனர்ஸ்) பட்டப் பெயரோடு படித்த அறிஞர்களால்) படம் பிடிக்கப்பட்டு, ஆண்களாலேயே, கதை வசனம், பாட்டு, நடிப்பு, யாவும் தயாரிக்கப்பட்டு, ஆண்களாலேயே வெளியிடப்பெற்று, மக்கள் பார்வைக்கென படங்கள் ஊர்களில் வலம் வருகின்றன. இவைகள் ஆபாசக் குப்பை கூளங்கள், அறிவுக் கொவ்வாத பித்தலாட்ட, சோம்பேரித்தனமான, அயோக்கியத்தனமான, மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான, மூடத்தனமான படங்கள். இவைகளைப் "பெண்கள் பார்க்கக் கூடாது" எனப் பெண்களாலேயே, அபிப்பிராயம் கூறப்படுகிறதென்றால், அதைப் பிடித்த அறிஞர்களின் அறிவு வளர்ச்சி எத்தனை தூரம் நம் நாட்டுப் பெண்களின் பாராட்டுதலுக்குப் பாத்திரமாகிறதென்பதை சிந்தனை செய்ய வேண்டும்.

இதைவிட அவமானம் வேறு என்ன வேண்டும்? உடனே நம் பட முதலாளிகள் கண்விழிக்க வேண்டும். தங்கள் படத் தயாரிப்பு சித்தாந்தங்களை மாற்றிக்கொண்டு, ஆண் பெண் அனைவரும் பார்க்கத் தக்க கௌரவமான படங்களைத் தயாரிக்க முற்பட வேண்டும். இப்படி அவர்கள் செய்யத் தவறினால் "குண்டுசி" குத்திக் காட்டட்டும்.

—திருமதி சம்பத்குமார்
மைலாப்பூர்

தியாகம் அவசியம்

உண்மையிலேயே சினிமாக்கலை சமூக சீர்திருத்தத்திற்கு இன்றியமையாததாக இருக்கலாம், அதன் தன்மையைப் பற்றி வாயாரப் பேசலாம், கையொடிய எழுதலாம். ஆனால் நடைமுறையில் சினிமாவினால் என்ன பயன் ஏற்பட்டு வருகிறதென்பதே கேள்வி.

படம் நல்லதாயிருந்தால் போனால் போகட்டுமென்று ஒரு தடவை பார்த்துவிட்டு வருகிறார்கள். ஆபாசம் நிறைந்ததாயிருந்தாலோ இவ்வளவு மலிவாகக் கிடைக்கும் காட்சியை விடுவானேன் என்று ஒரு தடவைக்கு பத்துத் தடவையாகப் பார்த்து ரசித்துவிட்டே வருகிறார்கள்!

உலகத்தைச் சினிமாப் பித்துப் பிடித்துக் கொண்டிருக்கிறது. கலை கலைக்காகவே (Art For Art) என்பதுபோல் சினிமாப் பார்ப்பது சினிமாப் பார்ப்பதற்காகவே என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலை அடியோடு மாறவேண்டுமானால் சினிமா உலகில் பெரியதொரு புரட்சியும், மகத்தான தியாகமும் அவசியம். ஆபாசப் படங்களைத் தயாரித்தவர் இதுவரை அடித்த கொள்ளை (லாபம்) போதுமென்று தங்கள் பாபத்திற்குப் பிராயச் சித்தமாக அவைகளைத் தீயிட்டுக் கொளுத்தவேண்டும்.

இந்த தியாகம் உண்மையிலேயே மக்களின் கண்களைத் திறந்துவிடும். அவர்கள் சினிமாவிற்கும் வாழ்க்கைக்கும் தொடர்புண்டு எனும் உண்மையை அப்போது உணருவார்கள்! பின்பு நல்ல படங்கள் மூலம் கிடைக்கும் படிப்பினைகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள்! இது என் கருத்து; ஆனால் இதை யாராவது மதிப்பார்களா?

—"பரதேசி"
மைசூர்

திருந்துமா?

காரையிலே இருந்துவரும் நேஷனல் டாக்கிஸ் பெயரளவில் கொட்டகையே தவிர, உண்மையில் பொது மக்களுக்கு பயன் படக்கூடிய அளவில் அமைக்கப்படவில்லை. கக்கூசுக்கு அருகாமையிலே சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் பொது மக்களுக்கு சுகாதாரக் குறைவு ஏற்படுகிறது. மின்சார விசிறிகள் என்ற நாமதேயமே கிடையாது. அநுபவம் போதாதவர்களை ஆப்ரேட்டர்களாகக் கொண்டிருக்கிறது, காக்ஷி ஆரம்பிக்க ஒரு குறிப்பிட்ட நேரம் என்பதே கிடையாது. ஆட்டகால சட்டம்தான் இப்படி இருக்கிறதென்றால், காக்ஷி துவக்கி முடியும்வரை சுமார் பத்து தடவைக்குமேல் பிலிம் அறுந்துவிடுகிறது. பத்து வருஷத்திற்கு முற்பட்ட படங்களே, அடிக்கடி நடைபெறுவதால், படத்தின் குற்றத்தினாலோ, அல்லது இயந்திரத்தின் கோளாறினாலோ ஏக இரைச்சலாயிருக்கிறது. இதனால் ஆவேசமடைந்த மக்கள் கல்லெறியும் வசைமாரியும்

பொழிய ஆரம்பித்து விடுகிறார்கள், "சினிமாக் கொட்டகை கலகம்" என்றே ஒருதினசரி நடத்துவதற்குக் கூட சம்பவங்கள் கிடைக்கும். கண்ணிய மிக்க புரொப்ரைட்டர் அவர்கள் இவ் விஷயத்தில் கவனம் செலுத்துவா ரென நம்புகிறேன்.

—மாரிமுத்து
காரைக்கால்

மர்மம் என்ன?

மதுரையிலுள்ள சில தியேட்டர் களில் டிக்கெட் வாங்குவதற்காக, சிறிய சந்து போல் சுவர்களைக் கட்டி, "க்யூ" வரிசையில் நிறுத்தி நபருக்கு 1 டிக்கெட் விதம் கொடுத்து, டிக் கெட்டை வாங்கியவர்கள் அப்படியே தியேட்டருக்குள் செல்லும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முறை சிறந்ததுதான்.

ஆனால், ஒரு பர்லாங் தூரம் க்யூவில் நின்று கொண்டிருப்பார்கள் ஜனங் கள் 2 அல்லது 3 பேர்கள்தான் டிக் கெட் வாங்கி இருப்பார்கள். அதற்குள் தியேட்டருக்கு வெளியில் ஆறரை அணா டிக்கெட் பத்து அணாவாகவும், நாலரையணா டிக்கெட் எட்டணாவாக வும் கருப்பு மார்க்கெட்டில் விற்பனை நடக்கும்.

இவர்களுக்கு மட்டும் இப்படி புஸ்த கக் கணக்கில் டிக்கெட் எப்படிக் கிடைத்தது என்று உங்களுக்கு ஆச் சரியமாக இல்லையா? ஏன் தியேட் டர் முன் க்யூவில் நின்ற அத்தனை பேருக்கும்தான் ஆச்சர்யமாக இருக் கும். அதுதான் எனக்கும் ஆச்சர்ய மாக இருக்கிறது. இந்த மர்மம் யாருக்கும் புரியவில்லை. அதனால், "ஒரு வேளை தியேட்டர் முதலாளி களே இந்த கருப்பு மார்க்கட் விற் பனைக்கு உடந்தையோ?" என்று சந்தேகிக்க வேண்டி இருக்கிறது. அல்லது டிக்கெட் கொடுக்கும் குமாஸ் தாக்களுக்கும்—இந்த கருப்பு வர்த்த கர்களுக்கும் ரகசிய ஒப்பந்தம் உண்டோ?

இதைக் காட்டிலும் விசேஷம் என்ன வென்றால் "வெளியில் வாங்கும் டிக் கெட் செல்லாது" என்று கொட்டை எழுத்தில் டிக்கெட் ஜன்னலுக்கு மேலும், தியேட்டர் வாசலிலும் போர் டுகள் தொங்குகின்றன. இன்னும் பெரிய அதிசயம்—இந்த கருப்பு வர்த் தகர்களைப் பிடிப்பதற்காக வென்று போலீஸ்காரர்களையும் தியேட்டர் முத லாளிகளே 'ரெடி' யாக வைத்தி ருக்கிறார்கள்! இவர்கள் கண் முன் னால்தான் "ஆறரை அணா டிக்கெட் பத்து அணா ஸார்; பத்தணா!" என்று கூவிக்கொண்டே விற்கிறார்கள். போலீஸ்காரர்களோ காது கேட்கா தவர்களைப் போல் நடந்து கொள்ளு கிறார்கள். ஒருவேளை இந்த கருப்பு வர்த்தகர்களுக்கும், போலீஸ்காரர் களுக்கும் லாபத்தில் பாகப் பிரிவினை இருந்தாலும் இருக்கலாம் என்று நம்ப வேண்டியிருக்கிறது.

எப்பக்கம் திரும்பினாலும் 'பிளாக் மார்க்கெட் ஒழிக' (கருப்பு மார்க் கெட்) என்று கோஷங்கள் கிளம்புவ தைக்கண்டாவது, மேற்படி தியேட்டர் முதலாளிகள் டிக்கெட் விற்பனை விஷ யத்தில் உள்ள குறைகளை கவனிப்பார் களா?

—கே. ராமையா
திருமங்கலம்


## சிறந்த வாட்ச் 'ரிப்பேர்'கள்

ரிஸ்ட் வாட்சுகள், கடியாரங்கள், டைம்பீஸ்கள், பிளாஸ்டிக் ஸ்டிராப்புகள், மூக்குக் கண்ணாடிகள், பௌண்டன் பேனாக் கள் மற்றும் எல்லா நூதன சாமான்களும் கிடைக்கும்

# கரீம் வாட்ச் கம்பெனி

53, உஸ்மான் ரோடு, தி. நகர்,
சென்னை 17.

# நாடகங்களும் தமாஷாவரியும்

## — நவாப் ராஜமாணிக்கத்தின் பிரசங்கம் —

மதுரை செல்லம் தியேட்டரில் நடந்து வந்த "ஞானசவுந்தரி" நாடகத்திற்கு 2—11—47ல் விஜயஞ் செய்த சென்னை சட்டசபை மெம்பரும், செலக்ட் கமிட்டி அங்கத்தினருமான பாகனேரி ஸ்ரீ ஆர். வி. ஸ்வாமிநாதன் அவர்களை நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் வரவேற்று பின்மாறு பேசினார்:—

"இது காறும் தமிழகத்தில் எண்ணிறந்த நாடகக் கம்பெனிகள் தோன்றி மறைந்திருக்கின்றன நாடக கம்பெனி மூலம் பொருள் சம்பாதிப்ப தென்பது எளிதல்ல. இது எனது அனுபவ உண்மை. 35 வருஷ காலம் இத் தொழிலில் ஈடு பட்டு, இத் தேவி கம்பெனி ஆரம்பித்து 16 வது ஆண்டு நடை பெற்று வருகிறது. லக்ஷக் கணக்கில் பணத்தை செலவு செய்தும், எனது முழு நேரத்தையும் இக் கலைத் தொண்டிற்கே அர்ப்பணித்தும் கடனாளியாகவே கம்பெனியை நடத்திச் செல்கிறேன், என்றால் ஏனைய கம்பெனிகளைப் பற்றி கூற வேண்டிய தில்லை. நாடகத்தின் மூலம் சத்தியத்தையும் பக்தியையும் நன்குணர்ந்துகொண்ட காந்தியடிகள், ராஜேந்திர பிரசாத், ராஜாஜி போன்ற பெரியோர்கள் நாடகக் கலை நாட்டில் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமெனும் விருப்பங் கொண்டு நமக்கு நற்சாக்ஷி பத்திரங்கள் அளித்திருக்கின்றனர்.

"சரீரத்தையும் சாரீரத்தையும் அன்னுடம் காப்பற்றினால் தான் நாடகத் தொழில் நன்கு நடை பெறும். நாடக நிர்வாகத்தில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கிறதென்பதை இக் கம்பெனிக்கு தலைவனாகவும் வாத்தியராகவும் நடிகனாகவும் தொழிலாளியாகவும் இருக்கும் எனக்கு நன்கு தெரியும். நமது என்று உரிமை பாராட்டக் கூடிய காங்கிரஸ் கவர்ன்மெண்டார் எங்கள் போன்ற நாடகக் கம்பெனியாரின் கஷ்ட நிலைமையை சற்று ஆழ்ந்து சிந்தித்து பார்க்க வேண்டுமென்று எனது தாழ்மையான அபிப்பிராயத்தைக் கூறுகிறேன். இன்னிலையில் தமாஷ் வரியை உயர்த்தினால் நாடகக்-கலை செழித்தோங்குவதோ நாட்டிற்கு நற்பணி புரிவதோ இயலாத காரியமாகிவிடும்.

"மது விலக்கு, அரசாங்க வருமானத்தைப் பாதிக்கிறதென்பது உண்மையே. வரியைக் குறைப்பதற்காக நமது சொந்த அரசாங்கத்தோடு போராடத் தயாராயில்லை. அவர்கள் நன்கு யோசித்து வரியை உயர்த்தாமல் இருப்பதே நலம், இல்லையேல் எனது கம்பெனியை சர்க்காரே பொறுப் பேற்று நடத்தட்டும்; நான் மனப்பூர்வமான ஒத்துழைப்புடன் தொண்டாற்ற சித்தமாய் இருக்கிறேனென உறுதி கூறுகிறேன்."

பின்னர் ஸ்ரீ ஆர். வி, ஸ்வாமிநாதன், ஸ்ரீ. நவாப் ராஜ மணிக்கம் பிள்ளையின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.

[இதன் பிறகு சட்ட சபையில் நிறைவேறியுள்ள தமாஷாவரி மசோதாவில் நாடக சபைகளுக்கு வரியில் பிரத்யேக சலுகை காட்டியிருப்பது கவனிக்கத் தக்கது.—ஆசிரியர்.]

"கங்கணம்" தமிழ்ப் படத்தில் ஹாஸ்ய நடிகர்களான (சம்ஸார நௌகா புகழ்) காமெடியன் கே. ஸ்ரீநிவாஸனும், கல்யாணமும்.

### ராம ராஜ்யம்

பிரகாஷ் பிக்சர்ஸ் தயாரித்த ராமராஜ்யாவை தமிழ் வசனங்கள், பாட்டுக்களுடனும தயாரித்து ஏவி. எம் ஸ்டுடியோஸார் தீபாவளியன்று திரை யிட்டிருக்கிறார்கள். ராமராக, டி. பி, ராமச்சந்திரனும், லக்ஷ்மணனாக டி. கே. ராமச்சந்திரனும், வசிஷ்டராக குளத்து ஐயரும், வால்மீகியாக தேவநாராயணனும், லவனாக லக்ஷ்மீநாராயணனும், குசனாக ஏ.கே. கணேசனும், வண்ணானாக வி. கே. ராமசாமியும். சீதையாக டி. எஸ். பகவதியும், சிறிய வாசந்தி-பெரிய வாசந்தியாக ஸாவித்திரியும், கௌசல்யாவாக ஈ. வி. கிருஷ்ணம்மாளும், சித்ரலேகாவாக ஏ. எஸ். ஜயாவும குரல் கொடுத்திருக்கிறார்கள். இது தவிர டி. கே. பட்டம்மாளும், பி. ஜி. வெங்கடேசனும், சமய சந்தர்ப்பத்திற்கேற்ப பின்னணியில் உணர்ச்சி ததும்ப பாடியிருக்கிறார்களாம். சுதர்சனத்தின் சங்கீத டைரெக்ஷனும், குளத்து ஐயரின் வசனங்களும பாட்டுக்களும மக்களை கவர்ந்து வருகிறதாம். வெளியூர்களில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் இப் படம் இம மாதத்தில் சென்னையில் திரையிடப் படும்.

### மாஜி ராணுவத்தினருக்கு சலுகை

சினிமா ஆபரேட்டர்களின் பரீக்ஷைக்காக முதல், இரண்டாந்தர வகுப்பைச் சேர்ந்த ராணுவ சினிமா ஆபரேட்டர்களுக்கு, ஆபரேட்டர் பரீக்ஷைக்காக இரண்டு வருஷகாலம் பயிற்சி பெற்றிருக்க வேண்டும என்ற நிபந்தனை கிடையாது. இரண்டு வருஷ காலம் லைசென்சுக்காக கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் பரீக்ஷைக்குக் கட்ட வேண்டிய கட்டணத் தொகையான ரூபாய் ஆறை மட்டும் இவர்கள செலுத்த வேண்டும்.

### காஷ்மீர் பற்றிய செய்திப் படம்

காஷ்மீரில் குண்டர்களின் படையெடுப்பை நம் இந்தியத் துருப்புகள் விரட்டியடித்து வரும் சம்பவங்களை ஒரு செய்திப் படமாகத் தயாரித்திருக்கின்றனர். இத்துடன் ஜவஹரின் ஒருநாள் காஷ்மீர் விஜயத்தையும் காண்பிக்கிறார்களாம். விளக்கவுரை, ஆங்கிலம், ஹிந்தி, காஷ்மீரி ஆகிய பாஷைகளில் இருக்கிறதாம்.

### மதுரை ஸ்டுடியோவில் தீ

மதுரைக் கருகாமையிலுள்ள பிலிம் ஸ்டுடியோ ஒன்றில் சென்ற மாதம் இருபத்தி மூன்றாந் தேதி காலை தீப் பிடித்துக்கொண்டது. தீ அணைக்கும் படை ஒன்று ஸ்தலத்திற்கு விரைந்து சென்று சுமார் இரண்டரை மணி நேரத்தில் தீயை அணைத்தது. படப் பிடிப்பிற்காக உபயோகப்படும் ஒரு ஸ்டுடியோ சேதமடைந்தது.

### நவாபின் நாடகங்கள்

மதுரை செல்லம் தியேட்டரில் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியார் வெற்றிகரமாக நாடகங்களை நடத்தி வருகின்றனர். "ஞான சௌந்தரி" நாடகத்தை நான்கு வாரங்கள் நடத்தி விட்டு, இம்மாதம் 11-ந் தேதி முதல் அவர்களது அதி பிரபலமான "சக்தி லீலா" நாடகத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நாடகம் அங்கு பல வாரங்கள் நடைபெறும் என்று தாராளமாய் எதிர்பார்க்கலாம்.

### கல்கத்தா தியேட்டரில் அமளி

வடக்கு கல்கத்தாவிலுள்ள ஒரு தியேட்டரில் நவம்பர் மாஸம், 13ந்தேதி

காலேக்காட்சியொன்று நடந்தபோது அத்தியேட்டரின் நாற்காலிகள், சோபாக்கள், ஜன்னல் திரைகள் முதலியவைகள் சேதமாக்கப்பட்டன வாம். திரைச் சீலேகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டதாம். டிக்கெட்டை வாபஸ் செய்யும்படி டிக்கெட் அறையில் சிலர் புகுந்து அட்டகாசம் செய்தனராம், போலீஸார் ஸ்தலத்திற்கு வந்து கூட்டத்தைக் கலேத்து இது சம்பந்தமாக இருபது நபர்களேக் கைது செய்திருக்கிருர்களாம். இதற்குக் காரணம் புரொஜெக்டரில் கோளாறு ஏற்பட்டு இடையில் காட்சி நிறுத்தப் பட்டது தான் என்று தெரிகிறது.

### ஸ்வாமிகள் மனேவி காலமானுர்

ஸ்ரீலஸ்ரீ மதுரை மாரியப்ப ஸ்வாமிகளின் மனேவியார் மதுரையில் சென்ற மாதக் கடைசியில் காலமானுர் என்ற செய்தி கேட்டு வருந்துகிருேம். மனேவியாரைப் பிரிந்து வருந்தும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு நமது அனுதாபங்களேத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

### ராஜேஸ்வரி திருமணம்

ஏ. வி. எம். ஸ்டுடியோவில் ஊழியம் செய்பவரும், அவர்களுடைய சில படங்களுக்கு தம் இனிய குரலே இரவல் கொடுத்துள்ளவருமான ஸ்ரீமதி ராஜேஸ்வரி ஸ்ரீ. ஏ. சுப்ரமண்யத்தை டிஸம்பர் ஒண்ணுந் தேதி திருவல்லிக்கேணியில் மணந்து கொண்டார். தம்பதிகளுக்கு நமது மனமுவந்த வாழ்த்துக்கள்.

### மதனமாலா வெளியாகிறது

ஸ்ரீ ராமானந்தா பிக்சர்ஸ் தயாரித்துள்ள மதனமாலா இம்மாதம் 12உ வெளி வந்துள்ளது. பாமரர்களுக்குப் பிடித்தமான கதைப் போக்கைக் கொண்ட இப்படம் நல்ல வசூலே விநியோகஸ்தர்களுக்குச் சம்பாதித்துக் கொடுக்கும் என நம்பப்படுகிறது. ஸ்ரீராம் என்ற புது நடிகரை இப்படம் அறிமுகப் படுத்துகிறது: உப நடிகையாய் இருந்த ரஜனிக்கு தைரியமாக கதாநாயகி வேஷத்தைக் கொடுத்திருக்கிருர்கள். ரஜனியும் தான் நடிக்கும் பாத்திரத்தை உணர்ந்து நடித்து நடனமாடி யிருக்கிருராம். மற்றும் அனுபவசாலிகளான எம். வி. மணி, ரங்காச்சாரி போன்றவர்களும் இருக்கிருர்கள். ஹாஸ்யத்திற்கு வி. குமாரும், டி. எஸ். ஜயாவும் இருக்கிருர்கள். ரங்காச்சாரி கபாலிகன் என்ற சன்னியாசி வேஷத்தில் தோன்றி ஒரு பாட்டை பாடியிருக்கிருராம். வி. டி. கல்யாணம் ஒரு 'வில்லனுக' வருகிருராம். மற்றும் எஸ். ஆர். ஜானகி, வி. ராஜலக்ஷ்மி பி. எஸ். வீரப்பன் முதலியவர்களும் நடிக்கிருர்கள். ஸ்ரீ.கே. வேம்புசிரத்தையுடன் டைரெக்ட் செய்த படம் இது.

### புதிய படத் தணிக்கை போர்டு

வழக்கம் போல நம் மாகாண சர்க்கார் புதிய வருஷத்திற்கு (1947 டிசம்பர் 8–ந் தேதி முதல் ஒரு வருஷத்திற்கு) சினிமாப் படத் தணிக்கை போர்டை மாற்றி அமைத்திருக்கிருர்கள்.

சென்னே போலீஸ் கமிஷனர் (தலேவர்), செய்தி - விளம்பர இலாகா டைரெக்டர், செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் ஸ்டேஷன் ஸ்டாப் ஆபீஸர், மிஸஸ் எம். என். கிளப்வாலா, மிஸஸ் எம். விஸ்வநாத், பி. எஸ். வி. ஐயர், பி. துரைக்கண்ணு முதலியார், வி. ஸி. கோபாலரத்னம், எஸ். ஏ. ஷாபி முகம்மத் சாஹிப் பகதூர், ஜானகிராம்செட்டி, லால்தாஸ் கோவிந்ததாஸ் கே. ஹன்ஸ்ராஜ், டாக்டர் யு. கிருஷ்ணராவ், பி. சம்பந்த முதலியார், எஸ். வையாபுரிப் பிள்ளே, முசிரி சுப்ரமண்ய ஐயர். எம், சத்யநாராயணு, பி. பாலசுப்ரமண்ய முதலியார், வி. அய்யாசாமி நாயுடு, மிஸஸ். மோனு ஹென்ஸ்மென் முதலியோர் புதிய போர்டில் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் ஸ்ரீ. சம்பந்த முதலியார்,

மிஸஸ் ஸெப்வாலா, முசிரி சுப்ரமண்ய ஐயர். வி. ஸி. கோபாலரத்னம், டாக்டர் யு. கிருஷ்ணராவ், வையாபுரிப் பிள்ளை, ஷாபி முகம்மது, எம். சத்யநாராயண முதலியவர்கள் சென்ற வருஷத் தணிக்கை போர்டிலும் அங்கம் வகித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

### கோமதியின் காதலன்

"ஆனந்த விகடன்" பொழுது போக்குச் சங்கத்தினர் சென்ற மாஸம் 30-ந் தேதி மயிலை ரஸிக சஞ்சனி சபையில் "தேவன்" எழுதிய "கோமதியின் காதலனை" நாடகமாக நடித்துக் காட்டினார்கள். ஒரே சிரிப்பு மயமாக இருந்ததாம், "தேவன்" எழுதிய சம்பாஷணைகள் என்றால் சிரிப்பிற்குக் கேட்பானேன். இந்தக் காதலன் கோமதியினுடையது மன்றி எல்லோரது காதலையும் பெற்றுவிட்டானும். தலைமை வகித்த ஸ்ரீ. வி. ஸி. கோபாலரத்னம், நடிகர்களைப் புகழ்ந்தும், ஒவ்வொரு பத்திரிகை காரியாலயத்தாரும் இம்மாதிரி சுவையான நாடகங்களைத் தயாரிக்க வேண்டு மென்றும் கூறினாராம். எஸ். வி. ரங்கா ("எஸ். வி. வி." யின் மகன்), "நாரதர்" ஸ்ரீனிவாஸ ராவ் ஆகியவர்களின் நடிப்பு சபையினரை மகிழ்வித்ததாம். மற்றும் மஹாதேவன், கோபால கிருஷ்ணன், சந்திர மௌளி, ராஜாராம், காஷியர் வைத்யநாதன், சக்கரவர்த்தி, சேது மாதவன், வாஞ்சிநாத ஐயர், மல்லிகேஸ்வரன் முதலியவர்களின் வேஷப் பொருத்தமும், சச்சிதமான நடிப்பும் திருப்திகரமாகவே அமைந்ததாம். இந்நாடகத்தை ரசனையுடன் டைரெக்ட் செய்த ஸ்ரீ. ராமமூர்த்திக்கு இந்தக் "கோமதியின் காதலன்" நல்ல பெயரையே சம்பாதித்துக் கொடுத்து விட்டான். "தேவன்" இம்மாதிரி நாடகங்களை இனி எழுதிக் குவிப்பாராக. இந்நாடகத்தை படமாகக்கூட எடுக்கலாமே!

சங்கீதக் கச்சேரிகள் செய்து வரும் ஆர். அம்புஜவல்லி பிரகதியின் "ஏ. 1" சமூகப்படத்தில் நடித்து வருகிறார்.

### சஸி புனு

குடியாத்தம் வாணி பில்ம்ஸ் வினியோக உரிமை பெற்றிருக்கும் ஹிந்தி சமூகப்படமான சஸி புனு சென்ற 21-ந்தேதி யன்று பத்திரிகை நிருபர்களுக்கும், வர்த்தக நண்பர்களுக்கும் சென்னை சாகர் டாக்கீஸில் காட்டப்பட்டது. அன்றே இப்படம் திரையிடப்பட்டது. கீதா நிஸாமி, ஜயராஜ், யசோதரா கட்ஜூ, கோபி முதலியவர்கள் இதில் திறம்பட நடித்திருக்கிறார்களாம்.

### இரு படங்களுக்குத் தடை

ரோஷன் பிக்சர்ஸ் தயாரித்த அராப்-கி-சிதாரா என்ற ஹிந்திப் படத்தையும், மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்த பர்மா ராணி தமிழ்ப் படத்தையும் சென்னை மாகாணத்தில் திரையிடக் கூடாது என்று சென்னை மாகாண சர்க்கார் தடை உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

### தமாஷ் வரியில் சர்க்காருக்கு 10 சத விகிதம்

மொத்த தமாஷா வரியில் பத்து சத விகிதம் சர்க்காருக்கு நிரந்தரமாக ஒதுக்கப்படும். மீதமுள்ளது ஸ்தல ஸ்தாபனங்களைச் சேரும்.

### மஹாராஜா ஆதரவு

பம்பாய் பம்பா பிக்சர்ஸாரின் டைரெக்டரான ஸ்ரீ. சாந்திஷ் படேல், தனது கன்னடப் படங்களான **குவிட் இந்தியா, ஜான்ஸி ராணி** சம்பந்தமாக வந்திருந்த பொழுது மைசூர் மஹாராஜாவைச் சந்தித்து, கர்னாடகத்தில் படத் தொழிலை விஸ்தரிப்பது பற்றிப் பேசினார். மஹாராஜாவும், படத் தொழிலுக்கு எல்லா வகையான சலுகைகளும் ஆதரவுகளும் அளிப்பதாகவும், கலைக்காக மைசூர் எதுவும் செய்யத் தயாராக தயாராயிருக்கிறதென்றும் கூறினார்.

### தேசிகர் "மேத்தா"வாகிறார்

எம். எம். தண்டபாணி தேசிகரை பக்த மேதா படத்திற்குக் கதாநாயகராகப் போட்டு எடுக்கப் போகிறாராம் சோமயாஜுலு. தேவசேனா கதாநாயகியாக நடிப்பாராம். முன்பு கே. சுப்ரமண்யத்திற்கு இதே கதையை எழுதிக் கொடுத்த சோமயாஜுலு, திரும்ப அதன் உரிமையை தாமே பெற்றிருக்கிறாராம்.

### "களக்காடு" முதலாளியாகிறார்?

களக்காடு ராமநாராயணய்யர், கேமிராமென் ஈ. ஆர். கூப்பர், கே. மஹாலிங்க ஐயர் ஆகியோர் சேர்ந்து "ஸ்ரீ சுந்தரி பில்ம்ஸ்" என்ற புதியதோர் பில்ம் கம்பெனியை ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் **பார்கவா** என்ற தமிழ்ப் புராணப் படத்தை ஈ. ஆர். கூப்பரின் டைரெக்ஷனில் சென்னை ஸதர்ன் ஸ்டுடியோவில் தயாரிப்பார்களென்றும் கேள்வி. இப்படத்தில் களக்காடு பிரதம பாகத்தில் நடிப்பாராம்.

### 'நாம் இருவரை'க் கேளுங்கள்!

"நாம் இருவர்" சினிமாப் படத்தின் பாடல்களையும், வசனங்களையும் உங்கள் வீட்டிலேயே கேட்கலாம். இது எப்படி என்கிறீர்களா? ஸரஸ்வதி ஸ்டோர்ஸார், "நாம்–இருவர்" பாடல்களையும், வசனங்களையும் அதே நடிகர்களைக் கொண்டு கொலம்பியா இசைத்தட்டுகளில், ஏற்றியிருக்கிறார்கள். ஒவ்வொரு தட்டாக ஆறு தட்டுகளை வரிசைக் கிரமமாக கிராமபோனில் வைத்து ஓட்டவேண்டியது தான். அந்த ஷண்முகம் பிள்ளையின் "மனுஷம் பிள்ளை ரோசம் சொர்னு வருது", "ரொம்பத்தான் வளையாம போறுரே!", "ஏண்டி உனக்கு நான் பெண்டாட்டியா?" போன்ற வசனங்களைக் கேட்கலாம். அதோடு இதில் மஹாலிங்கத்தின் பாடல்களையும்கேட்கலாம்! "இதோ நிறுத்து!" என்று ராமச்சந்திரன் குரல் கேட்கிறது. நானும் இச்செய்தியை "நிறுத்திப் புட்டேன்"!

### புது ஸ்டுடியோ

சென்னையில் ஸ்ரீ. ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அடையாறில் ஒரு ஸ்டுடியோவை நிர்மாணித்து வருகிறார். ஸ்டுடியோவின் கட்டிட வேலைகள் நடந்து வருகின்றதாம். கூடிய சீக்கிரமே இந்த ஸ்டுடியோ படப் பிடிப்பிற்குத் தயாராகி விடுமாம்.

### புதிய கம்பெனி

படத் தொழிலில் பல வருஷங்களாக உழைத்து அநுபவம் பெற்றுள்ள ஆர். ராஜகோபால், டி. வி. சேதுராமன், வி. என். சுந்தரம், பட்டாபிராமன், வெங்கட்டராமன் ஆகியவர்களது கூட்டு முயற்சியின் விளைவாக ஒரு புதுப் படக் கம்பெனி உருவாகி வருகிறதாம். இக்கம்பெனியின் பெயர் "கீதா பில்ம்ஸ்" என்றிருக்கும் போலிருக்கிறது. இவர்கள் ஒரு தமிழ் சமூகப் படத்தைத் தயாரிக்கப் போவதாகவும், அதற்காக பி. எஸ். சரோஜாவை ஒப்பந்தம் செய்திருப்பதாகவும் கேள்வி.

தமிழ்நாடு
சென்னை-600 008.
134107

இம் மாதம் வெளிவந்துள்ள "மதன மாலா"வில்
திறப்பட நடிக்கும் எம். வி. மணி.

"கண்ணம்மா என் காதலி"யில்
கன ஜோராய் நடித்த எம். எஸ்.
சுந்தரி பாய் "மிஸ் மாலினி"யில்
மேலும் அதிகப் புகழ் பெறுகிறார்

# பிரம்ம லோகம்

### "வேதாள உலகம்"

காரைக்குடி ஏ. வி. எம். ஸ்டுடியோவில் வெகு துரிதமாகத் தயாராகி வருகிறது "வேதாள உலகம்." டி. ஆர். மஹாலிங்கம், யோகமங்களம், கே. சாரங்கபாணி முதலியவர்கள் முக்கியமான வேஷங்களிலே நடித்து வருகிறார்கள். தத்தனாக வரும் சாரங்கபாணியின் தத்ரூப நடிப்பைக்கண்டு பிரமிக்கப் போகிறீர்கள் என்று இப்பொழுதே சொல்லுகிறேன். அவ்வளவு ஜோராக அமைந்திருக்கிறதாம். "அன்றொருநாள் குட்டி" என்ற கிட்டப்பாவின் பிரம்மானந்த பாடலை நினைவூட்டும் ஒரு பாட்டும் இதிலே இருக்கிறதாம்.

### "அபிமன்யு"

ஜூபிடரின் "அபிமன்யு" அடிக்கடி வளர்ந்து வருகிறானாம். குமரேசன், ஜீவரத்தினம் பிரதான பாகங்களில் நடிக்கின்றனர்.

### "பில்ஹணன்"

டி. கே. எஸ். சகோதரர்களும், சேலம் ஷண்முகா பில்ம்ஸாரும் சேர்ந்து தயாரிக்கும் "பில்ஹணன்" திரைக்குத் தயாராக இருக்கிறது. பில்ஹணனாக டி. கே. ஷண்முகமும், யாமினியாக எம். எஸ். திரௌபதியும், அரசனாக டி. கே. பகவதியும் உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார்களாம். நடிப்பிலே ஊறிப்போனவர்கள் நடித்தால் நன்றாக இராதா என்ன? ஏ. எஸ். ஏ. சாமியின் வசனங்கள் படத்திற்கு ஒரு சோபையை அளிக்கிறதாம். கே. வி. சீனிவாஸன் டைரெக்ட் செய்த படம். பொங்கல் வெளியீடாக இருக்கும்.

### "அபூர்வசிந்தாமணி"

ஆயிரந் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி கதையை மக்கள் விரும்பும் முறையில் படமாகப் பிடித்து இருக்கிறாராம் டி. ஆர். சுந்தரம். மாயா ஜாலக் காட்சிகளும் திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த கதை. பி. எஸ். கோவிந்தன், ஆர். பாலசுப்ரமண்யம், எம். ஆர். சாமிநாதன், கே. கே. பெருமாள், காளி என். ரத்தினம், டி. எஸ். துரைராஜ், ஏழுமலை, வி. என். ஜானகி, வரலக்ஷ்மி, மாதுரிதேவி, பத்மா, ராஜகாந்தம் முதலியவர்கள் நடித்திருக்கிறார்கள். சன்னியாசியாக வரும் சாமிநாதனின் நடிப்பு பிரமாதமாக அமைந்திருக்கிறதாம்.

### "பிழைக்கும் வழி"

மரகதா பிக்சர் "பிழைக்கும் வழி" என்ற படத்தைத் தயாரிக்கிறார்கள். ஹாஸ்ய நடிகர் துரைராஜிற்கு 'மீராவிலே' ஒரு தமாஷ் ஹிந்தியும் தெலுங்கும் கலந்த பஜனைப் பாட்டைக் 'கவனம்' செய்து கொடுத்தவரும், நாடக, சினிமா உலகிலே நிறைந்த அனுபவம் வாய்ந்தவரான ஸ்ரீ டி. கே. சுந்தரவாத்தியார், கதை வசன பாடல்களை எழுதிக் கொடுத்திருக்கிறார். ஹாஸ்யத்திற்குக்

பாட்டி லேசான பாட்டியல்ல. நாட்டுப் பெண்ணை படாத பாடு படுத்தி வைப்பதை "சம்ஸாரநௌகா"வில் பார்க்கலாம். டி. பிரேமாவதி, டி. கே. மதுரம்.

குறைவே இருக்காது. காளி ரத்தனம், டி. எஸ். துரைராஜ், டி. எஸ். பாலையா, எம். ஆர். சாமிநாதன், கே. கே. பெருமாள், குளத்து மணி, பி. ஜி. வெங்கடேசன், டி. ஏ. ஜயலக்ஷ்மி, ஸி. டி. ராஜகாந்தம், பி. ஆர். மங்களம், பி. எஸ். ஞானம் முதலியவர்கள் நடிக்கிறார்கள். பின்னணி பாடல்களை டி. கே. பட்டம்மாள் பாடியிருக்கிறார். மித்ரதாஸ் என்பவர் டைரெக்ட் செய்கிறார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது. டி. எஸ். துரைராஜ்தான் இக்கம்பெனியின் சொந்தக்காரர்;

"ஞான சௌந்தரி"

ஸிடேடல் பில்ம்ஸ் தயாரிக்கும் "ஞான சௌந்தரி" முடிவடைந்து கொண்டிருக்கிறது. இன்னும் சில காட்சிகள் தயாராகிவிட்டால் படம் பூர்த்தியானமாதிரி. ரீ-ரிகார்டிங்கும் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. ஏசு கிறிஸ்துவாக வருபவரின் உணர்ச்சி மிக்க நடிப்பு நம்மை மெய் சிலிர்க்க வைக்குமாம். டி. ஆர். மஹாலிங்கம் நன்றாகப் பாடியிருக்கிறாராம். எம். வி. ராஜம்மாவின் தோற்றம் காண்போரை வசப் படுத்தி விடுமாம். பல வருஷங்களாக நியூடோன் ஸ்டுடியோவில் ஆர்ட் டைரெக்டராக இருந்து வரும் ஜனாப் நாகூர் தான் இப்படத்தை சிரத்தையுடன் டைரெக்ட் செய்து வருகிறார். கதையைக் கூட அவரே எழுதியிருப்பதாகவும் கூறுகிறார்கள்.

"விஸ்வா மித்ரா"

ஜகன்னாத் புரொடெக்ஷன்ஸ் தயாரித்ததும், முன்பு எங்கோ ஒரு

டி. கே. ஷண்முகம் "பில்ஹணன்"

ஊரில் திரையிடப்பட்டதுமான "விஸ்வாமித்ரா"விற்கு ஹாஸ்யக் கதை சேர்க்கப் பட்டு விட்டதாம். இதற்கு உதவியவர்கள் என். எஸ். கிருஷ்ணனும், டி. ஏ. மதுரமும். ராம்சிங், ராஜகுமாரி, சேதுராமன், புளிமூட்டை, ஆழ்வார் குப்புசாமி, ராமசாமி ஐயங்கார், கிருஷ்ணமாச்சாரி, வரதாச்சாரி, நளினி முதலியவர்கள் நடித்த படம். ஜகன்னாத் இதன் டைரெக்டர். இனி சுறுசுறுப்பாக "விஸ்வா மித்ரா" தனது யாத்திரையை ஆரம்பிப்பார்.

"கங்கணம்"

கே. ஆர். ராமசாமி, மேனகா, காஞ்சனா, மங்களம், பசுபுலேடி லீலா, நரேந்திரா. கல்யாணம், காமெடியன் சினிவாஸன், செல்லம், பி. ஜி. வெங்கடேசன், திருவேங்கடம், ஆகியவர்கள் நடித்த "கங்கணம்" திரைக்குத் தயாராக இருக்கிறது. வரலக்ஷ்மி விரத மகிமையை எடுத்துரைக்கும் இக் கதை பொது மக்கள் விரும்பும்படி அமைந்திருக்கிறதாம். எஸ். கே. வாசகம் டைரெக்ட் செய்த படம். ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி திரைக்கதையை எழுதியிருக்கிறார். வசனத்தை சந்திரசேகர் எழுதியிருக்கிறார் கே. ஆர். ராமசாமியின் பாடல்கள் நன்றாக இருக்கின்றனவாம். பொங்கல் தினத்தன்று இப்படம் பல ஊர்களில் வெளிவரும். இலங்கையில் இப்பட்ம் வெளிவந்து விட்டது.

"தேவதாஸி"

ஹாஸ்யக் கதை முடிந்தால் "தேவ தாஸி"யும் வெளிக் கிளம்ப வேண்டியது தான். கண்ணன் லீலா, மணி, பால சுப்ரமண்யம், காளி ரத்னம், துரை ராஜ், இவர்களுடன் கிருஷ்ணன்-மதுரமும் நடிக்கிறார்கள். பி. எஸ். ராமையா இதன் கதை வசனத்தை எழுதியிருக்கிறார். எம். எல். டாண்டன் டைரெக்ட் செய்கிறார். இது சுகுமார் பிக்சர்ஸ் தயாரிப்பு.

"ராமதாஸ்"

ஜகதீஷ்பில்ம்ஸின் "ராமதாஸ்" தனது வளர்ச்சியை பூர்த்தியாக்கிக் கொள்ள சில காட்சிகளை அடைய வேண்டியிருக்கிறது. இக் காட்சிகள் படமாக்கப்படுகின்றனவாம். சிறையில், ராமதாஸாக நடிக்கும் ராமநாராயண ஐயர் நன்கு நடித்து இருக்கிறாராம். பாட்டுகள் செவிக்கு இனிமையாக இருக்கின்றனவாம். ராவ், ருக்மணி மஹாலிங்க ஐயர் முதலியவர்கள் திருப்திகரமாக நடித்திருக்கிறார்கள். தர்மகர்த்தாவாக நடிக்கும் மகாலிங்க ஐயர் சக்கை போடு போட்டிருக்கிறாராம்!

"கோகுல தாஸி"

கே. சுப்ரமண்யம் டைரெக்ஷனில் நெப்டியூன் ஸ்டுடியோவில் திரன் கம்பெனியாரின்

"கோகுலதாஸி" வளர்ந்து வருகிறாள். ஹொன்னப்ப பாகவதர், எம். வி. ராஜம்மா, சௌதாமினி, டி. எஸ். துரைராஜ் முதலியவர்களுடன் லலிதா, பத்மினியும் நடிக்கிறார்கள். "இளங்கோவன்" கதை வசனங்களைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்.

"மகா பலி"

ஜி. ஆர். வரதாச்சாரி, எம். கே. ராஜகுமார், 'விஷ்ணு' ராமசாமி ஐயங்கார் நடிக்கும் "மகா பலி"யின் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. பாஸ்கர் டைரெக்ட் செய்து வருகிறார். இது பாமா பிலிம்ஸாரின் தயாரிப்பு.

"மின்மினி"

ஸ்ரீ பாரதி பிக்சர்ஸின் "மின் மினி" பிரகதியில் வளர்ந்து வருகிறது. விஜயகுமார், மேனகா, கிருஷ்ணஸ்வாமி, காஞ்சனா, வாசுதேவன், சேதுராமன் முதலியவர்கள் நடிக்கிறார்கள். ராம்நாத்தும், கிருஷ்ணஸ்வாமியும் டைரெக்ட் செய்கிறார்கள். பாதிப் படத்திற்கு மேல் தயாராகி விட்டதாம்.

"கிருஷ்ண பக்தி"

கிருஷ்ணா பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி" ஆர். எஸ். மணியின் திறமையான டைரெக்ஷனில் நியூடோனில் வளர்ந்து வருகிறது. சின்னப்பா, ராஜகுமாரி, தனலக்ஷ்மி, பாலசுப்ரமண்யம், கிருஷ்ணன், மதுரம், புளிமூட்டை, ஆழ்வார் குப்பு சாமி, பெரிய நாயகி, எ. ஆர். சகுந்தலா, கே. ஆர். ராமசாமி, முதலியவர்கள் நடித்துவருகிறார்கள்.

"ஏ ஒன்"

பிரகதி ஸ்ரீ. கந்தசாமி பிள்ளை கதை வசனம் எழுதிய "ஏ ஒன்" என்ற படம் டைரெக்டர் எல்லிஸ் ஆர். டங்கனின் பார்வையில் தயாரிக்கப் படுகிறது. பந்துலு, சாரங்க பாணி, பெரிய நாயகி, ஆர். அம்புஜவல்லி (என்னும் புதிய நடிகை) முதலியவர்கள் நடிக்கிறார்கள். சமீபத்தில் சென்னை கந்தஸ்வாமி கோயிலில் ஒரு காட்சியும் படமாக்கப் பட்டது.

"சம்சார நௌகா"

பிரகதியிலே தயாராகும் மற்றொரு படமான "சம்சார நௌகா"விற்காக ஒரு சமையலறைக் காட்சி பிடிக்கப்பட்டது


# இந்நாளில் ஜவுளிகள்

## தயாரிப்பிலும் வினியோகத்திலும் கண்டிப்பான கட்டுப்பாடு

ஆனால்......

காலத்திற்கு ஏற்றவாறு எல்லோரையும் திருப்தி செய்ய நல்ல டிசைன்கள் தயாரிக்கவோ, விற்பனை செய்யவோ கட்டுப்பாடு கிடையாது.

எங்களிடம்........

எப்பொழுதும் எல்லா ரக ஜவுளிகளும் சிறந்த மாதிரிகளில் நிறைய சல்லிசாகக் கிடைக்கும்.

## மயிலை சில்க் ஸ்டோர்ஸ்

வடக்கு மாட வீதி,

மயிலாப்பூர் :: சென்னை.

பி. ஆர். பந்துலு. பிரேமாவதி, சூரிய குமாரி, விகடம் கிருஷ்ணமூர்த்தி, டி. ஆர். ராமச்சந்திரன் டி. கே. மதுரம் முதலியவர்கள் நடிக்கிருர்கள். மூலக் கதையை எழுதிய ஸிம்ஹாவே டைரெக்ட் செய்து வருகிருராம்.

" சந்திரலேகா "

வருகிற மார்ச் மாஸம் 6-ந் தேதி ஜெமினியின் "சந்திரலேகா" திரைக்கு வருவாள் என்று ஒரு செய்தி காதில் விழுகிறது.

"தேவ மனேகரி"

"குண்டலகேசி"யைத் தயாரித்த ஆர். கே. எஸ். பிக்சர்ஸார் எ. டி. கிருஷ்ணசாமியின் டைரெக்ஷனில் "தேவ மனேஹரி" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிருர்கள். ஸி. ஹொன்னப்ப பாகவதரும், பி. எஸ். சரோஜாவும் பிரதம பாகங்களில் நடிக்கிருர்கள். நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியிலும், சக்தி நாடக சபையிலும் பிரதம பாகம் வகித்து வந்த கே. வி. சீனிவாஸன், மற்றும், வி. கே கார்த்திகேயன் ('நாம் இருவர்' டைரெக்டர் ஹனுமந்தராவ்), டி. கே கோவிந்தன், டி. கே. கல்யாணம், லக்ஷ்மி தேவி, லக்ஷ்மி காந்தம் முதலியவர்கள் நடிக்கிருர்கள். பிரகதியிலே தயாராகும் இப் படம்.

" சம்சாரம் " தயார்

"இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது? யார் சம்சாரம் தயார்? எங்கு போவதற்குத் தயார்?" என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறதல்லவா? பம்பாய் ஈஸ்டர்ன் ஸ்டுடியோவில் யாதொரு தடபுடலுமின்றி "சம்சாரம்" என்ற தமிழ்ப் படம் தயாராகியிருக்கிறதாம்.

ஸ்ரீ. வி. எஸ். ஐயர் தயாரித்ததும், பாபுராவ் சவானுல் டைரெக்ட் செய்ததுமான இப்படத்தில், விமல் குமார், பி. கே. மாதவன், பி. எஸ். ராஜா ஐயங்கார் முதலியவர்களுடன், "ஜீவஜோதி" யில் லக்ஷ்மியாக உள்ள முருக நடித்த கே. கே கிருஷ்ணவேணி கதா நாயகியாக நடித்திருக்கிருராம். அவர் நன்ருக பாடியுமிருக்கிருராம். விமல் குமார் சங்கீத டைரெக்டராம்.

மீன பில்ம்ஸ்

பம்பாயிலே முகாமிட்டிருக்கும் மீன பில்ம்ஸ் உரிமையாளர் ஆர். எம். கே. செட்டியார் நல்ல தமிழ்ப் படங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிருராம். கே. கே. கிருஷ்ணவேணியையும், விமல் குமாரையும் இதற்காக ஒப்பந்தம் செய்திருக்கிருராம்.

"கட்ட பொம்மு"

மாரியம்மனைத் தயாரிக்கும் செல்வம் பிலிம் கம்பெனியார் அடுத்தபடியாக "கட்டபொம்மு" வைத் தயாரிக்கப் போகிருர்களாம். இது சரித்திரப் பிரசித்தி பெற்ற கதை– என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்.

" நாத விஜயம் "

கிரீன் பிக்சர்ஸின் "நாத விஜயம்" சில நிர்வாக மாறுதல்களுடன் கோவை சென்றிருந்தது. இப்பொழுது அது மீண்டும் சென்னைக்கே திரும்பி வந்திருக்கிறதாம். இனி இங்கேயே படப்பிடிப்பு ஆரம்பமாகி சீக்கிரமாய் முடிப்பார்கள் என்று அறிகிருேம்.


மதுரையில்

உங்கள் மனதிற்கு திருப்தி அளிக்கும்

பட்டு, ஜரிகை, & நூல் ஜவுளிகள், கவர்ச்சிகரமான கலர்களில், நீண்ட நாள் உழைப்புக்கு ஏற்றபடி, அநேக புது ரகங்கள் எங்களிடம் கிடைக்கும்.

கண்டி கலைமகள் ஸ்டோர்ஸ்

31, மேல கோபுரத் தெரு, மதுரை.

1

2

**ஏமாந்தது யார்?**

**கணவனா,**

**மனைவியா ?**

3

4

# பி. எஸ். ஸ்ரீனிவாச ராவ்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

கருதப்பட்டு வந்தது. அதோடுகூட மிகுந்த பண வசூலையும் பெற்றது. ஸ்ரீனிவாஸராவும் இப்படத்தின் மூலம் புகழ் பெற்றார்.

**சந்திரசேனவுக்குப்** பிறகு ஸ்ரீனிவாஸராவ் மீண்டும் ஸ்ரீனிவாஸ ஸினிடோனில் சேர்ந்து **ஞானசௌந்தரி, ராஜாம்பாள்** ஆகிய படங்களில் நடித்தார். இந்தப் படங்கள் சுமாராக ஓடின. பிறகு அந்த ஸ்டுடியோவிலிருந்து விலகி நேஷனல் மூவிடோன் தயாரித்த **பார்வதி கல்யாணத்தில்** மன்மதனாக நடித்தார்.

இந்த சமயத்தில் தான் ராயல் டாக்கிஸார் தங்கள் பிரசித்தி பெற்ற **சிந்தாமணி** படத்தைத்தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். **சிந்தாமணி** படத்தில் ஒய். வி. ராவ் நடித்திருக்கிறரே, அந்த மனோஹரன் வேஷத்தில் தோன்றுவதற்கு முதலில் ஸ்ரீனிவாஸ ராவ்தான் ஒப்பந்தம் செய்யப் பட்டிருந்தார். ஆனல் துரதிருஷ்ட வசமாய் அவர் டைபாய்ட் ஜுரத்தில் படுத்ததால் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ள வேண்டியதாயிற்று.

டைபாயிட் ஜுரத்திலிருந்து குணம் அடைந்ததும் ஸ்ரீனிவாஸ ராவ் பம்பாய்க்குச் சென்று **டேன்ஜர் ஸிக்னல்** தமிழ்ப் படத்தில் நடித்தார். இது ஒரு ஸ்டன்ட் படம் என்பதுதான் நேயர்களுக்குத் தெரிந்த விஷயமாயிற்றே? பிந்தின வருஷங்களில் ஸ்ரீனிவாஸ ராவைப் பல ஸ்டன்ட் படங்களில் நடிக்கும்படியும், பம்பாயிலேயே வசிக்கும்படியும் செய்தது இந்தப் படந்தான்.

மேற்படி படத்தில் நடித்து விட்டு ஸ்ரீனிவாஸ ராவ் 1937-ம் வருஷம் சென்னைக்கு வந்திருந்த போது **பஸ்மாஸுர மோஹினி** படத்தில் விஷ்ணுவாக நடித்தார். பின்னர் பம்பாய்க்குச் சென்றார். அவரை மோஹன் ஸ்டுடியோக்காரர்கள் மூன்று வருஷ காலத்திற்கு நிரந்தர சம்பளத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இவரைப் பிரதம பாகத்தில் நடிக்கச் செய்து, மோஹன் ஸ்டுடியோக்காரர்கள் **மின்னல் கொடி, வீர ரமணி, பக்கா ரௌடி, பாக்ய லீலா, ஜய பாரதி, மனமாளிகை;** ஆகிய ஆறு தமிழ்ப் படங்களைத் தயாரித்தனர். இவைகளுள் **மின்னல்கொடிக்கு** பிரமாதமான பொதுஜன ஆதரவு கிடைத்தது. மற்றவை சுமாராகவே ஓடின.

ஸ்ரீனிவாஸராவைக் கொண்டு தமிழில் படங்களைத் தயாரித்ததோடு, அவருக்குச் "சந்திரகாந்த்" என்ற புனைப் பெயரைக் கொடுத்து, அவர்கள் தயாரித்த **அர்த்தராத்திரி மெயில், ரத்ன லுட்டாரி, ரணஸங்ரம், மாசு உள்ளம்** ஆகிய ஹிந்தி ஸ்டன்ட் படங்களில் தொடர்ந்து நடிக்க வைத்தனர்.

1939-ம் வருஷ இறுதியில் ஸ்ரீனிவாஸ ராவ் மோஹன் ஸ்டுடியோவை விட்டு விலகி, சொந்தத்திலேயே ஒரு படத்தைத் தயாரிக்க முற்பட்டார். அதன் விளைவாக **சாந்தா** தமிழ்ப் படம் உருவாயிற்று. இப்படத்தில் அவர் நடித்திருப்பதோடு டைரெக்ட் செய்துமிருக்கிறர். இப்படம் அவருக்கு லாபத்தை உண்டுபண்ணுவதற்குப் பதில் கொஞ்சம் நஷ்டத்தையும் உண்டு பண்ணிவிட்டது.

**சாந்தா** படத்தின் மூலம் ஏற்பட்ட பணக் கஷ்டம் அவரை ஸர்கோ படக் கம்பெனியில் கொண்டுபோய்ச் சேர்த்தது. அவர்கள் தயாரித்த **கீதா** என்ற மராத்திப் படத்தில் சந்திரமோஹன், துர்க்கா கோட்டே ஆகியோருடன் ஸ்ரீனிவாஸ ராவ் நடித்தார். பிறகு, இதே ஸ்டுடியோ தயாரித்த **துளஸி** ஹிந்திப் படத்திலும் அவர் தோன்றி

ஞர். "சந்திரகாந்த்" என்ற புனைப் பெயரை விட்டு விட்டு "ஸ்ரீனிவாஸ்" என்ற உண்மைப் பெயருடனேயே இப்படங்களில் அவர் நடித்திருக்கிறார்.

ஸ்ரீனிவாஸ ராவ் ஒரு தெலுங்குப் படத்தில் நடித்து அதை டைரெக்ட் செய்திருப்பதாக இக்கட்டுரை ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கிறேனல்லவா. இப்படத்தின் பெயர் **பதிபக்தி**. இதை அவர் 1942-ம் வருஷ ஆரம்பத்தில் பம்பாய் ஸ்டுடியோ ஒன்றில் காகினடா ஸ்ரீனிவாஸ் பிக்சர்ஸாருக்குத் தயாரித்துக் கொடுத்தார், இதே கம்பெனியார் **மிஸ் சகுந்தலா** என்றதோர் சமூகப் படத்தைத் தயாரிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டனர். அது சம்பந்தமாக ஸ்ரீனிவாஸ ராவ் சென்னைக்கு வந்து பிரபல வசுந்தரா தேவியை ஒப்பந்தம் செய்து கொண்டு போனார். அவர் இப்படத்தில் வசுந்தராவுடன் நடித்து, படத்தை டைரெக்ட் செய்வதென திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் முடிவில் இவ்வேற்பாடுகள் தவறிப்போய் படமே தயாரிக்கப் படவில்லை.

யுத்தம் ஆரம்பமானவுடன், பம்பாயில் அப்பொழுது தங்கியிருந்த இராணுவப் பகுதியினர் தங்கள் துருப்புகளின் பொழுது போக்குக்காக தென்னிந்திய பாஷைகளில் சில படங்களைத் தயாரிக்க விரும்பினர். இவைகளைத் தயாரித்துக் கொடுப்பதற்கு அவர்கள் ஸ்ரீனிவாஸ ராவைத் தேர்ந்தெடுத்தனர். அவர் அதற்கிணங்கி இந்திய சேனையில் 1943-ம் வருஷம் ஜூலை மாஸம் ஒரு ஸிவிலியனாகச் சேர்ந்தார். ஆறு மாஸ ஊழியத்திற்குப் பிறகு அவர் மன்னர் கமிஷன் அதிகாரிகளில் ஒருவராக்கப் பட்டார். பிறகு கேப்டன் பதவியையும் பெற்று, 1947ம் வருஷம் ஜனவரி மாஸம் இராணுவ சேவையிலிருந்து விடுபட்டார்.

ஸ்ரீனிவாஸ ராவ் அடக்கமான குணமுடையவர். அதோடு மற்றவர்களுடன் அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டு அவர்களது மனதைக் கவர்ந்து விடக்கூடியவர். பழகுவதற்கு நாம் மிக விரும்பக் கூடிய நடிகர்களில் ஸ்ரீனிவாஸ ராவ் ஒருவர். ஆகவே அவர் இராணுவ சேவை புரிந்து வந்தபோது தம் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்று விட்டது ஆச்சரியப் படத் தக்க விஷயமல்ல. அவர் தென்னிந்திய பாஷைகளில் பல படங்களை இராணுவத்தினருக்குத் தயாரித்துக் கொடுத்து, பாராட்டுதலைப் பெற்றிருக்கிறார்.

இராணுவ சேவையிலிருந்து விடுபட்டதும் அவரை சினிமா உலகம் மறுபடியும் கவர்ந்து கொண்டது. ஸ்ரீ. ஸி. கே. ராஜகோபால் தாம் பம்பாயில் தயாரித்த **வீரவனிதா** தமிழ்ப் படத்தில் ஆர். பி. லக்ஷ்மி தேவியுடன் அவரை நடிக்கச் செய்தார். இதில் நடித்துக் கொண்டிருந்த போதே சென்னை பதி பிக்சர்ஸார் அவரைத் தங்கள் **ஜீவஜோதி** தமிழ்ப் படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

கேப்டன் உடையில் ஸ்ரீனிவாஸராவ்

ஜீவஜோதியில் ஸ்ரீனிவாஸராவின் நடிப்பு முதல்தரமாய் அமைந்திருக்கிறது. அது அவருக்கு மிகப் பொருத்தமான வேஷம். ஆங்கில நாகரிகத்தில் மூழ்கிப் போய் இந்தியா திரும்பும் அந்த கதாபாத்திரத்தை அவர் ஏற்றுக் கொண்டு, அதை வெகு அழகாக நடிக்கிறார். ஸ்டன்ட் படங்களில் மட்டுமல்ல குண விசேஷம் நிரம்பிய பாத்திரங்களையும் தாம் வெகு சிறப்பாக நடிக்கக் கூடும் என்று அவர் இப் படத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார். நடிப் போடுகூட இந்தப் படத்தின் டைரெக்ஷனிலும் அவருக்குப் பங்கு உண்டு.

சிவந்த மேனியும், சுமார் ஐந்தரை அடி உயரமும், அழகிய தோற்றமும், சாதுவான குணமும் உடைய ஸ்ரீனிவாஸ ராவுக்கு இரு மனைவிகள் இருக்கின்றனர். சுமார் 16 வருஷங்களுக்கு முன் மணந்துகொண்ட மூத்த மனைவி மூலம் மட்டும் அவருக்கு இரு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்திருக்கின்றனர். இரண்டாவது மனைவியான நாகமணி, சென்னை ரேடியோவில் பாடிவரும் 'நாகமணி—சுசீலா சகோதரிகளி'ல் ஒருவராவார்.

ஸ்ரீனிவாஸ ராவ் நடிப்புக் கலையில் மட்டுமன்றி சித்திரக் கலையிலும் நல்ல பழக்கமுடையவர். ஒழிந்த வேளைகளில் வர்ணச் சித்திரங்களை அவர் வரைந்து கொண்டிருப்பதைக் காணலாம். அவருடைய தகப்பனார் தொழில் கல்விக் கழகத்தில் உத்தியோகம்பார்த்ததின் விளைவாகப் போலும், ஸ்ரீனிவாஸ ரா்வுக்கு இயந்திரங்களை ரிப்பேர் செய்யவும் தெரிந்திருக்கிறது. இவை தவிர அவருடைய ஒழிந்த வேளைகளில் பங்கெடுத்துக் கொள்ளுபவை பிரபல வட நாட்டு சங்கீத வித்வான்களான பாலகந்தர்வா, கைசால் ஆகியோரின் இசைத் தட்டுகளும், கிரிக்கெட், டென்னிஸ், கால் பந்து முதலிய விளையாட்டுகளும் ஆகும். அவருக்கு நீந்தவும், மோட்டார் ஓட்டவும், குதிரை சவாரி செய்யவும் கூடத் தெரியும்.

தமிழ் ஸ்டன்ட் பட நடிகர்களில் ஸ்ரீனிவாஸ ராவ் அளவு வேறு யாரும் புகழைச் சம்பாதித்துக் கொள்ளவில்லை. "டாக்கி யுக வித்தல்" என்று கூடச் சொல்லலாம். இலங்கை ரஸிகர்களுக்கோ ஸ்ரீனிவாஸ ராவ் நடித்த படங்கள் கற்கண்டும், சர்க்கரைப் பாகும் மாதிரி.

இவ்வளவு திறமை மிகுந்த ஸ்ரீனிவாஸ ராவை தமிழ்ப்பட உலகம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றால் அதற்குக் காரணம் "நம் பட முதலாளிகளின் அசட்டைதான்" என்று சொல்லிவிட முடியாது. அவர் பெரும்பாலும் பம்பாயிலேயே தங்கியிருந்தது தான் இதற்குக் காரணமாயிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இனி நம் பட முதலாளிகள் அவர் விஷயத்தில் தாராளமாகவே நடந்து கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

---

### பக்ஷிராஜா "பவழக்கொடி"

பக்ஷிராஜ பில்ம்ஸார் டி. ஆர் மஹாலிங்கத்தைக் கொண்டு **பவழக்கொடி** தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். இப்படத்தில் டி. ஆர். ராஜகுமாரி, எம். எஸ். சரோஜினி, டி. இ. வரதன், லலிதா, பத்மினி, கிருஷ்ணன், மதுரம், காளி என். ரத்தினம் ஆகியோரும் நடிப்பார்கள். கதையை "இளங்கோவனு"ம், பாட்டுகளை பாபநாசம் சிவனும் தயாரித்து வருகின்றனர். பக்ஷிராஜா ஸ்டுடியோவில் எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு டைரெக்ஷனில் இப்படம் தயாராகும்.

### ஜீவஜோதியில் புதிய பாட்டுகள்

பதி பிக்சர்ஸார் தயாரித்துள்ள **ஜீவ ஜோதியில்** புதிதாக கவர்ச்சிகரமான மெட்டுகளில் சில இனிய பாட்டுகளைச் சேர்த்திருக்கிறார்களாம். இப்படத்தை அவர்களே சென்னையிலும், வெளியூர்களிலும் பொங்கலன்று வெளியிடப் போகிறார்களாம்.

—தமிழ் ஸினேரியோ—

# கிச்சு-பிச்சு

பாலபாரதி ச.து.சு.யோகி

மணியன்.

(ஆசிரியர் உரிமை)

இது அடியேன் எழுதியுள்ள "கிச்சு-பிச்சு" என்னும் ஒரு கிண்டல் கதையின் ஒரேயொரு சின்னஞ் சிறு பகுதி; அப் பகுதியிலும் முணுக்கு முணுக்கென்னும் ஒரு துணுக்குச் சம்பவம்.

ஸ்ரீமான்கள் கிச்சுவும் பிச்சுவும் (கிருஷ்ணமூர்த்தி, பிச்சமூர்த்தி) முட்டாள்தனத்தில் முதல்தரமான பேர்வழிகள்; இருவரும் எச்சி (லக்ஷ்மி) என்னும் ஒரே பெண்ணைக் காதலிக்கின்றனர்.

ஸ்ரீமதி எச்சு, ஸ்ரீமான் ரங்கர்—ஸ்ரீமாட்டி ரங்கி என்னும் ரம்பவாய்த் தம்பதிகளின் திருப்புதல்வி; கிச்சு ஸ்ரீமாட்டியின் தம்பி மகன்; பிச்சு ஸ்ரீமானின் தங்கை மகன்.

ஸ்ரீமதி எச்சி இருவரையும் மனதார வெறுக்கிறாள். இருவரும் அவளை மனதார விரும்புகின்றனர். ஸ்ரீமான் ரங்கர் பிச்சுவுக்கும் எச்சுவுக்கும் முடிபோட முயல்கிறார். ஸ்ரீமாட்டி ரங்கி கிச்சுவுக்கும் எச்சுவுக்கும் கல்யாணம் கட்ட நினைக்கிறாள்.

ஸ்ரீமதி எச்சி ஒரு கதையில் வரும் 'எம காதகன்' என்பவனைப் போன்ற ஒரு 'திரிலோகமும் புகழும் சுந்தர தீர வீர சூரன் நானே' பேர்வழியை மணஞ் செய்து கொள்ள விரும்புகிறாள்.

அவளது விருப்பத்தை அறிந்த கிச்சு-பிச்சு இருவரும் வீரராவதற்காக, தண்டால் பஸ்கிகளெடுத்து, கட்டித் தொங்கவிட்ட படுக்கையுடன் குஸ்தி போடுகின்றனர்.

அதே சமயத்தில் ஸ்ரீமான், ஸ்ரீமாட்டி, ரங்க-ரங்கி தம்பதிகளின் அறையில்.........?

இக் கட்டத்தில் நமது 'காட்சிக் கொப்பு' (ஸினேரியோ) ஆரம்பமாகிறது.

## காட்சிக் கோப்பு

கலம்—1. காட்சி—6.

[இடம்—ரங்க-ரங்கி அறை] [நடர்-ரங்க-ரங்கி] [காலம் மாலை 5-மணி]
[தெய்வளர் பிறை]

க. 1-30.

நுண்ணணிமை-சேர்ந்து ஒட்டி உறவாடும் ஒரு சிலையின் இரு முகங்கள்.

வெளி யொலி

ரங்கர் :-ஊம் -(ஒரு கனைப்பு)

ரங்கி ;-க்ர்ம் க்ர்ம் (ஒரு இருமல்).

ரங்கர்:-[ஒரு தும்மல்.]

ரங்கி:-[ஒரு விம்மல்.]

[கருவிப் பாய்ப்பு]

பின் நோக்கி - விளம்பனம் - நுண்ணணி முதல் அணிமை வரை . ஆணும் பெண்ணும் ஆசையுடன் ஆலிங்கனம் செய்வது போன்ற ஒரு சிலையின் முழு உருவமும் தெரிகிறது.

வெளி வசனம்.

ரங்கர் :-அம்மாடி !

ரங்கி :-அப்பாடா !

[கருவிப் பாய்ப்பு]

அணிமை முதல் மத்ய அணிமை வரை - சிலையின் ஈருருவங்களும் எதிர்முறையாகத் திரும்புகின்றன. அச் சிலைக்குக் கீழுள்ள 24-மணி காட்டும் கடியாரம் ஒன்று 15-ம் மணியையும், 15-ம் தேதியையும் காட்டி நிற்கிறது. இரண்டு முகங்கள் கடிகாரத்தின் இருபுறங்களிலும் எதிர்நோக்கிய பின்னலும் கிராப்புமாகத் திரும்புகின்றன. அவ்வாறு திரும்பிய வாறே தலையை மட்டும் திருப்பித் திருப்பிச் சம்பாஷணை நடக்கிறது.

ரங்கர்:-ஏண்டீ! நமக்குக் கலியாணமாயி எத்தனை வருஷமாச்சு ?

ரங்கி :-பதினஞ்சு வருஷம்.

ரங்கர் :-இல்லே பதினாறு வருஷம்.

ரங்கி :-இல்லெல்லே, பதினஞ்சுதான்.

ரங்கர் :-இல்லே, இல்லே. இல்லே, பதினாறுதான்.

ரங்கி :- ஊ ஹூம்! பதினஞ்சுதான்.

இவ்வாறு கூறியவாறே தனது நகைகளை யெல்லாம் டிராயரில் வைத்துக் கொண்டிருந்த ரங்கி திடீரெனக் கணவன் பக்கம் திரும்பியவளாய் கடிகாரத்தின் மூன்று முட்களையும் 15-ல் திருப்பி வைக்கிறாள்.

[கருவிப் பாய்ப்பு]

மத்ய அணிமையிலிருந்து மிக மிக விளம்பனமாக மத்யமாகிறது ; தன்னுடைய கைக் கடிகாரம், பவுண்டன் பேனா, மோதிரங்கள், மணிபர்ஸ் இவற்றைக் கழற்றி வைத்துக் கொண்டிருந்த ஸ்ரீமான் ரங்கர் தம் மனைவி பக்கம் திரும்பித் தாமும் கடிகாரத்தின் மூன்று முட்களையும் 16-க்குத் திருப்புகிறார்.

ரங்கர் :-ஊ ஹூ ஹூம் ! பதினாறுதான்.

மறுபடியும் மறுபடியும் அதே மாதிரி கடியாரச் சேஷ்டை.

ரங்கி :-நான் பதினஞ்சுங்கறேன்.

ரங்கர்: பதினாறுங்கறேன்

[வெட்டு]

க. 1-31.

நுண்ணணிமை - கடிகாரம் மட்டும் - மாறிமாறிப் பதினஞ்சும், பதினாறும்,

வெளி வசனம்.

ரங்கி :-பதினஞ்சு.

ரங்கர் :-பதினாறு.

ரங்கி :- பதினஞ்சேதான்.

ரங்கர் :-பதினாறேதான்.

[வெட்டு]

க. 1-32,

மத்யக் காட்சி – ரங்கர் - ரங்கி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவராய் நிற்கின்றனர். ரங்கி தன் கையை ஆட்டியவாறே,

ரங்கி :-பதினஞ்சு, பதினஞ்சு, பதினஞ்சு.

ரங்கர் :-சரியம்மா, பதினஞ்சுதான்.

[கருவிப் பாய்ப்பு]

பின் நோக்கி, விளம்பனம், தொடர் தூக்கு (Follow shot) - ரங்கி முன்னும், அவளது பக்கத்தில் ரங்கருமாக முன்னால் கருவிப் பாய்ப்பைத் தொடர்ந்து மத்யக் காட்சியிலேயே வருகின்றனர்- பேசியவாறே—?

ரங்கி :-அப்படி வாங்க, வழிக்கி.

ரங்கர் :-அதுதான் வந்துட்டேன், ஆனால்...?

இப்போது அவர்கள் எதிரும் புதிருமாயுள்ள தங்கள் படுக்கைகளுக்கு நடுவில் ஒட்டினாற்போல் நிற்கின்றனர்.

ரங்கி :-ஆனா, என்னவாம் ?

ரங்கர் :-ஒண்ணுமில்லே. இருந்தாலும்...?

ரங்கி :-ஊம் !

ரங்கி 'ஊம்' கொட்டியவாறே படுக்கை மேல் உட்காருகிறாள், அவரும் தம் படுக்கையில் அவளெதிரில் உட்கார்ந்தவாறே-

ரங்கர் :-இந்தப் பதினஞ்சு வருஷத்திலே, என்னிக்காவது, எப்போதாவது, ஒரு வேளையாவது, ஒரு முறையாவது, நான் சொல்றதை நீ கேட்டிருக்கையா ?

அவர் சிரக்கம்பம் செய்து, கையை நீட்டி, விரலை ஆட்டியாட்டிப் பேசுகிறார். அதைக் கேட்ட அம்மாள் வெடுக்கென்று எழுகிறாள்.

[வெட்டு]

க. 1-33.

மத்ய அணிமை—அடி நிரைக் காட்சி. உட்கார்ந்துள்ள ரங்கரின் முகம் பக்க வாட்டில் முன்னணியாய் விளங்க, ஸ்ரீமாட்டியின் முகமும், கையும், உடனும் மேலிருந்து கீழ் நோக்கிப் பட படக்க.

ரங்கி :-அப்படியா ! இந்தப் பதினஞ்சு வருஷத்திலே, என்னிக்காவது, எப்போதாவது, ஒரு வேளை, ஒரு சமயம், ஒரு முறை, ஒரு தரம், ஒரேயொரு கணம், ஒரேயொரு விசையாவது நான் சொல்றத்தை நீங்க கேட்டிருக்கிங்களா ?

[வெட்டு]

க. 1-34.

மத்ய அணிமை—முடி நிரைக் காட்சி—நிற்கும் அம்மாளின் தோள் பட்டையும் பக்க வாட்டு முகமும் முன்னணியாக, ரங்கர் மேநோக்கி.

ரங்கர் :-எந்த விஷயத்திலே நீ சொல்றத்தைநான் கேக்கலே ?

ரங்கி :-எந்த விஷயத்திலே கேட்டிருக்கிங்க ?

[வெட்டு]

க. 1-35.

அணிமை—நேர்—ரங்கி முகம் கோணிக் குலுக்கி விம்மி.

ரங்கி (தொடர்ச்சி) :-ஒங்களைக் கண்ணாலங் கட்டிண்டாலுங் கட்டிண்டேன். ஒரு நகெயுண்டா? நட்டுன்டா? ஒரு மொறெயுண்டா? எனக்கு என்ன தானிருக்கு ?

இப்போது ரங்கர் கைகளால் அவள் தோளைப் பிடித்துத் தம் பக்கம் திருப்ப முயல்கிருர்.

[வெட்டு]

க. 1-36.

மத்ய அணிமை—ரங்கர் ரங்கியின் இடத் தோளை ஒரு கையால் அணைத்தவாறே,

ரங்கர்:-என்னதான் இல்லேங்கறேன்? ஒன் வாயொண்ணே போதுமே? ஒலகத்தையே வெலெக்கி வாங்கிடுமே......?

—என்று முகத்தில் இடிப்பது போல் மற்ருெரு கையை விசிக் கூறிய பின்—சிறிது தலை குனிந்து யோசிப்பவர் போல் நின்று,

அதிருக்கட்டும், நம்ம எச்சுவை......?

உடனே ரங்கி சரேலென்று அவர் பக்கம் திரும்பியவளாய்,

ரங்கி ;-என் தம்பி மகன் கிச்சுவுக்குத்தான்......?

அவரும் அவள் பக்கம் திரும்பி,

ரங்கர் :-ஊ ஹூம் ! என் தங்கை மகன் பிச்சுவுக்குத் தான்.

[கருவிப் பாய்ப்பு]

அணிமை வரை—விளம்பனம்—இருவர் முகங்களும், கை விச்சுகளும் நெருங்குகின்றன.

ரங்கி :-அந்தப் பித்துக்குளி பிச்சுவுக்கா ?

ரங்கர் :-இல்லே, அந்தக் கில்லாடிக் கிச்சுவுக்கா ?

[நெட்டுப் புறச் சலனம்]

(வலம்) ரங்கியின் முகம் கோணி,

ரங்கி:-எப்போதும், எங்க மனுஷான்னுத்தான் ஒங்களுக்கு ஆறதில்லையே ?

[புறச் சலனம்]

(இடம்) ரங்காவும் சலித்தவாறு,

ரங்கர்:-எம் மனுஷான்னு ஒனக்கு மாத்தரம் ரொம்பப் பிடிக்கறதாக்கும் ?

பிறகு—

[வெட்டு]

க. 1 - 37.

மத்யக் காட்சி—இரு படுக்கைகளும் ஒப்பனைச் சட்டகம் (Balanced Framing)—

ரங்கி :- எப்படியானாலும் சரி, எச்சுவெக் கிச்வுசுக்குத்தான் கண்ணாலங் கட்டணம் !

—என்றவாறே ரங்கி திடீரென்று படுக்கையில் அமர்ந்து, கால் வீசி, முதுகு காட்டி உட்காருகிறாள்.

ரங்கர் :- ஒலகமே பெரண்டாலும் சரி, எச்சுவெப் பிச்சுவுக்குத்தான் கண்ணாலங் கட்டணம்.

அவரும் அதோதிரி செய்கிறார்.

[வெட்டு]

க. 1 - 38,

தொலைவு மத்யம்—அதே காட்சி.

ரங்கி :- அதையுந் தான் பார்ப்போமே ?

—என்றவாறு ரங்கி படுக்கையின் புறத்தே குதித்து, முன் வந்து, முகங்கோணி நிற்கிறாள்.

ரங்கர் :- அதை நானுந் தான் பாக்கறேனே.

அவரும் அதேபடி செய்கிறார்.

ரங்கி :- நல்லாப் பாருங்கோ !

—என்றபடி முகம் திரும்பி அப்பால் நடக்கிறாள்.

[புறச்சலனம்]

[வலம்]

அவளுடன் சிறிது தொடர்ச்சி.

[வெட்டு]

க. 1 - 39.

அண்மைக் காட்சி—ரங்கர் யோசித்தவாறே தலையைச் சொரிகிறார்.

[வெட்டு]

க. 1 - 40.

மத்யம்—அவர் பின் நிற்க அவள் அவர் முன் அங்கும் இங்குமாய் அவசர நடை போடுகிறாள்—முகம் கோபம், குறும்பு, திண்ணக்கம்—இவைகளுடன் திகழ்கிறது.

[புறச்சலனம்]

[வலமிடம்]—அவர் தோன்றித் தோன்றி மறைகிறார்- ஈற்றில் முன் வந்து மைய ஸ்தானத்தில் அவளை மடக்கி, மோவாய் வருடி, கொஞ்சுவது போலும், ஆனால் உறுதியாக,

ரங்கர் :- ஏண்டி ! இந்த வீட்டுக்கு எஜமானர் யாரு?

ரங்கி :- சர்த்தான், விடுங்கோ.

திமுறி அப்பால் செல்கிறாள், இவர் நின்ற நிலையிலேயே—

ரங்கர் :- யாருன்னு தான் கேக்கறேன்.

அவள் ராங்கியுடன் புயல்போல் வந்து,

ரங்கி ;- நீங்கதான், அதனாலே ?

ரங்கர் :- நான் சொல்றபடித்தான் நீ கேக்கணம்.

[வெட்டு]

க. 1 - 41

மத்திய அண்மை - பக்கவாட்டு, ரங்கர் தோள் வரை முன்னணி. ரங்கி ஏளனமாகச் சிரித்து,

ரங்கி :- (இ ஹி ஹி ஹி) ரொம்ப நல்லாருக்கே வார்த்தை ! நீங்க இந்த வீட்டுக்கு எஜமானர்...?

ரங்கர் :-ஊம்! அப்படிச் சொல்லு...?

ரங்கி :-(ஹ ஹ ஹ ஹ) ஆறு ஒங்களுக்கு எஜமானர்...?

[வெட்டு]

ந. 1 - 42.

அணிமை - ரங்கியின் தோள்வரை முன்னணி - நிறிதே நெட்டுச் சலன நெறியில் கருவி நோக்குகிறது. (Tilted angle) ரங்கர் கோபமுற்றவராய்—

ரங்கர் :-என்ன சொன்னே?

[வெட்டு]

ந. 1 - 43.

அணிமை. ரங்கி - அரைப்பக்க வாட்டு (Semi profile).

ரங்கி :-சொன்னேன், சொரக்காயிக்கி உப்பில்லென்னு.

[வெட்டு]

ந. 1 - 44.

அணிமை – ரங்கர் - அரைப்பக்க வாட்டு.

ரங்கர்:-ஏண்டி! எஜமானர் யாரீ? நீயா?

[வெட்டு]

ந. 1 - 45.

மத்யக் காட்சி - அவள் அவரைப் பார்த்து கை நீட்டி, அவரை இடிப்பது போல் காட்டி, பின் தன் மார்பில் ராங்கியோடு கை வைத்தவளாய்,

ரங்கி :-பின் யாரு? நீங்க சொல்றபடி மத்தவா கேக்கணம். நான் சொல்றபடி நீங்க கேக்கணம்?

ரங்கர்:-ஏண்டி! நீ சொல்றபடி நாங் கேக்கணமா?

ரங்கி :-பின்னென்ன? நீங்க சொல்றபடி நாங் கேக்கணமோ? நீங்கதான்...

ரங்கர்:-கேக்க முடியாது.

ரங்கி :-நானுங் கேக்க முடியாதிங்கறேன்.

ரங்கி :-நானுந்தான்முடியாதுங்கறேன்.

ரங்கர் :-முடியாது!

ரங்கி :-முடியாது! முடியாது!! முடியாது!!!

[கருவிப் பாய்ப்பு]

முன் நோக்கி - துரிதம்; அணிமை வரை - பின்.

[புறச் சலனம்]

அப்படியும், இப்படியும்; மாற்றி மாற்றி; ஈற்றில் ரங்கியின் முகம் மட்டுமான நுண்ணணிமைக் காட்சி. அப்போது எச்சியின் குரல் கேட்கிறது.

எச்சி :-கட்டாயம் முடியாது!

[துடைப்பு]

ந. 1 - 46.

நெட்டு - நுண்ணணிமை, எச்சியின் முகம் மட்டும்- தப்பளைச் சாய்ப்பு - ஆள் காட்டி விரல் முக நேர் ஆடுகிறது.

எச்சி :- (பாட்டு)

"கட்டாயம் முடியாது—
கண்ணாலங் கட்டிக்கிட்டு
மண்ணாகிப் போவதற்குக்
கட்டாயம் முடியாது."

[கருவிப் பாய்ப்பு]

பின் மத்யம் வரை, எச்சி தாலி கட்டுதலையும், மண்ணையும் காட்டும் சமிக்ஞைகளைச் செய்தவாறே முன் நோக்கி அணிமைக்கு வருகிறாள். ஆடிப்பாடி அப்போது எங்கிருந்தோ, கிச்சு - பிச்சுவின் குரல் கேட்கிறது - எச்சியின் முகம் நுண்ணணிமை.

வெளிக் குரல்

கிச்சு :- -முட்டாள் !

பிச்சு :- அடி முட்டாள் !

அதைக் கேட்டு எச்சி ஏளன முறுவல் பூக்கிறாள்,

[துடைப்பு]

இப் பகுதி பெரும்பாலும் சம்பாஷணையாலான ஒரு காட்சி, (சீன்). இனி அடுத்த பகுதியில் செயல் அதிகமான ஒரு பகுதியை ஆராயலாம். தவிர, ஒவ்வொரு காட்சிக்கும், தூக்குக்கும் அவ்வவற்றிற்கேற்ற ஒளித் தன்மை வன்மைகளையும் குறிப்பிட வேண்டியது ஸினேரியோக்காரனின் கடமை. அது இங்கு இடத்தின் குறுக்கம் நோக்கிச் செய்யப்படவில்லை. பொதுவாக, மேலுள்ள காட்சிக்கு [ரங்கரங்கி] பக்க வாட்டு முடிநிரை கூர் ஒளியும் (Spot light), பின் முடி நிரைச் சேர் ஒளியும் (Relief light), முன் நேர் வேர் ஒளியும் (General lighting) உபயோகிப்பது நலம்.

மற்றும், ஒவ்வொரு தூக்கிலும் ஒவ்வொருவர் செயலையும் விளக்கமாக எழுத வேண்டும். அவ்வாறு செய்தால் "குண்டூசி"யின் பக்கங்கள் போதா. அடுத்த பகுதியில் அதனையும் சிறிது கையாள்வோம். (தொடரும்)

பில்ஹணனைப் பற்றி யாமினி (எம். எஸ். திரௌபதி) தம் தோழிகளிடம் புகழ்ந்து பேசுகிறாள். டி. கே. எஸ். சகோதரர்கள் சேலம் ஷண்முகா பிலிம்ஸார் கூட்டுத் தயாரிப்பான "பில்ஹணன்" தமிழ்ப் படத்தில் ஒரு காட்சி.

# குண்டூசி டைரி

## நவம்பர், 1947

தேதி

6 தமாஷா வரி மசோதா திருத்தம் சம்பந்தமாக தென்னிந்திய பில்ம் வர்
சபையினர் நிதி மந்திரி கனம் பி. கோபால் ரெட்டியைச் சந்தித்தனர்.

9 "விசித்திர வனிதா" பத்திரிகைக் காட்சி ஸன் தியேட்டரில் நடைபெ

10 மாஜிமேயர் ஸ்ரீ.டி. சுந்தர்ராவ் நாயுடுவிற்கு ஸன் தியேட்டரில் நடைபெ
பிரிவு உபசார விருந்தில் சுதந்திர தின விழாவின்போது எடுக்கப்பட்ட
சுருளைகளும், வங்காள கவர்னர் ராஜாஜி சென்னைக்கு விஜயம் (
போது எடுக்கப்பட்ட படச்சுருளைகளும் காட்டப் பட்டன.

11 ஜூபிடரின் "கஞ்சன்" வெளியூர்களில் திரையிடப்பட்டது.

பக்ஷிராஜாவின் "கன்னிகா" சென்னை பிரபாத்திலும், வெளியூர்க
வெளியிடப்பட்டது.

ஸ்ரீ கமல் புரொடக்ஷன்ஸின் "உதங்கர்" வெளியூர்களில் திரை
பட்டது.

ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸின் "ராம் ராஜ்யம்" வெளியூர்களில்
பட்டது.

மீனாக்ஷி பில்ம்ஸின் "லக்ஷ்மி விஜயம்" சென்னை, கெயிட்டியிலும் ல
லும் திரையிடப் பட்டது.

கோவை ஷண்முகா தியேட்டரில் டி. கே. எஸ். சகோதரர்களின் "ஔ
நாடகம் ஆரம்பம்.

12 சென்னை சர்க்கார். சினிமோடோகிராப் சட்டத்தின் ஏழாவது 6
உள்ள கட்டண விகிதத்தை திருத்தம் செய்தனர்.

19 பச்சையப்பன் கல்லூரியின் கலை விழாவிற்கு பிரபல நடிகர் வி, நா
தலைமை வகித்தார்.

"சுசி-புனு" ஹிந்திப் படத்தின் பத்திரிகைக் காட்சி சாகரில் நடைபெ

21 சர்தார் வல்லபாய் படேல் தயாரித்த "நேதாஜி சுபாஷ்" என்ற செ
படம் சென்னை நியுகுளோப்பிலும் வெளியூர்களிலும் திரையிடப்பட்

23 என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் ராபின்ஸன் பார்க்கில் நடந்
விடக் கழகக் கூட்டத்தில் கலவரம்.

25 ஸ்ரீ. எஸ். எஸ் வாஸன் தமாஷா வரி சம்பந்தமாக விவாதிப்பதற்காக
சபையின் செலெக்ட் கமிட்டியினரால் அழைக்கப் பட்டார்.

29 சென்னை சட்ட சபையில் தமாஷா வரி உயர்வு மசோதா சட்ட
பட்டது.

30 "ஆனந்த விகடன்" பொழுது போக்குச் சங்கத்தார் சென்னை ர
சனி சபாவில் "கோமதியின் காதலன்" நாடகத்தை ஸ்ரீ. வி. ஸி. ே
ரத்னம் அவர்களின் தலைமையில் நடித்தனர்.

---

Printed by P. Arunachalam at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited & Published by P. R. S. Gopal (Gundoosi) at 246, Thambu Chetty Street, Madras. 1.